ஜூலை - டிசம்பர் 2016

மின் மலர்

HARNESSING ENERGY
SPREADING SMILES

என்எல்சி இந்தியா நிறுவன செய்தி மலர்
(முன்னாள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்)



பழுப்பு நிலக்கரி நகரிலிருந்து பாரம்பரியம் மிக்கப் பகுதியை நோக்கி!

கதாம்பூர் அனல்மின் நிலையக் கட்டுமானப் பணிகள் தொடங்கியது



உத்திரப் பிரதேச மாநிலம், கதாம்பூர் பகுதியில், நாம் அமைத்துவரும் 1980 மெ.வா அனல்மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணியை, 20.10.2016 அன்று, அப்பணித்தளத்தில் மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) திரு பியூஷ் கோயல், கான்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர். அருகில், மாண்புமிகு மத்திய உணவு பதனிடுதல் துறை இணை அமைச்சர் சாத்வி நிரஞ்ஜன் ஜோதி, மாண்புமிகு உத்திரப் பிரதேச திட்டம் மற்றும் மின் துறை அமைச்சர் திரு சைலேந்திர யாதவ், நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா மற்றும் முக்கியப் பிரமுகர்கள்.




2017ம் ஆண்டு, ஒளிமயமான ஆண்டாக அமைய மின்மலரின் வாழ்த்துகள்!

மாண்புமிகு மத்திய அமைச்சரின் நெய்வேலி வருகை



இரண்டாம் சுரங்கத்தில், சுற்றுச் சூழல் பூங்காவினைத் திறந்து வைத்தபின் மாண்புமிகு மத்திய அமைச்சர், நமது நிறுவனத் தலைவர், இயக்குநர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



Date	Name & Address
4/10/16	Piyush Goyal

Remarks

This has been a remarkable journey so far. It is indeed an outstanding example of environment-friendly mining and demonstrates the commitment of 'NLC' Team to serve the people of India - with power and clean atmosphere. Congratulations to all of you for this beautiful Deer Park and the lake facilities.

Piyush Goyal

மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) திரு பியூஷ் கோயல் அவர்கள் 04.10.2016 அன்று, நெய்வேலிக்கு வருகை புரிந்தார். அவருக்கு, நெய்வேலி விமானதளத்தில், சிவப்பு கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது. அவர் நமது முதல், இரண்டாம் சுரங்கங்கள் மற்றும் முதல் அனல்மின் நிலைய விரிவாக்கம் ஆகிய தொழிலகங்களைப் பார்வையிட்டு, நமது பழுப்பு நிலக்கரி மற்றும் மின்னுற்பத்தித் தொழில்நுட்பங்களை அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டார். அவருடன் நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா மற்றும் இயக்குநர்கள் திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர். இரண்டாம் சுரங்கத்தில் 12 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்த, பசுமைப் பூங்காவினையும், மான் பூங்காவையும் திறந்து வைத்த அமைச்சர், அங்குள்ள சுரங்கச்சோலையில் மரக்கன்றினையும் நட்டார்.

மதியம், வட்டம்–11 லிக்னைட் அரங்கத்தில் நமது ஊழியர்களிடையே உரையாற்றிய அமைச்சர் நமது ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கம் மற்றும் பொறியாளர் சங்கப் பிரதிநிதிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய கடின உழைப்பினைப் பாராட்டியதுடன், நமது நிறுவனம் தனது இலக்கை அடைந்து வளர்ச்சி பெறவும் வாழ்த்து தெரிவித்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிய உரையின் தொகுப்பு அடுத்துவரும் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் நமது நிறுவனத் தலைவர், இயக்குநர்கள், செயல் இயக்குநர்கள், உயரதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். பின்னர் லிக்னைட் அரங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது நாட்டின் மின்சக்தித் துறை நிலைகுறித்து எடுத்துக் கூறினார்.

நமது நிறுவனம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொடங்கவிருக்கும் திறன் மேம்பாட்டு மையத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி, மாண்புமிகு அமைச்சர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னதாக, நெய்வேலி பள்ளி மாணவர்கள் நடத்திய தூய்மை இந்தியா விழிப்புணர்வுப் பேரணியினை, கொடியசைத்து துவக்கி வைத்த அமைச்சர், பசுமையான நினைவுகளுடன், மாலை நெய்வேலியிலிருந்து, புதுடில்லி நோக்கிப் பயணமானார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் நமது ஊழியர்களிடையே வழங்கிய உரையின் தொகுப்பு



லிக்னைட் அரங்கில், நமது ஊழியர்களிடையே உரையாடுகிறார் மாண்புமிகு மத்திய அமைச்சர்

திரு ஆச்சார்யா அவர்களுக்கும், எனது அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய என்.எல்.சி. குடும்பத்தினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை, முதற்கண் தெரிவித்துக் கொள்வதுடன் எனது வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன். இன்று, நெய்வேலியில் நான் கண்ட காட்சி, என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஒருவேளை, எனது 2½ வருட காலத்தில், இதுதான் சிறப்பானதொரு பயணமாகக் கூட இருக்கலாம். நான் தற்போது திரு ஆச்சார்யா அவர்கள் என்மேல் கொண்ட கோபத்தின் காரணத்தை புரிந்து கொண்டேன். அதாவது நான் அமைச்சராகி, 2 வருட காலம் கடந்து, இங்கு வருகை புரிவது மற்றும் வந்தபின்னர் மிகக் குறுகிய காலத்தில் திரும்பிச் செல்வது ஆகிய இரண்டு காரணங்கள்தான். இங்கு வருகைபுரிந்து, நெய்வேலியில் உள்ள வசதிகளை முழுமையாகக் கண்ட பிறகு, அவரின் கோபத்திற்கான அர்த்தம் புரிந்தது.

நான் நெய்வேலிக்கு வருகை புரிய, அதிக நாட்கள் எடுத்துக் கொண்டதற்கு, தங்களிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன்; அனால், அதற்கு முக்கிய காரணம், புதிய மத்திய அரசிற்கு ஒன்றின்மேல் ஒன்றாக பல்வேறு பிரச்சனைகள் வந்ததுதான் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நாங்கள் அனைவரும் எங்களது வேலையை நேர்மையாகவும், ஈடுபாட்டுடனும் தேச நலனுக்காக செய்து வருகிறோம்; அதுமட்டுமல்ல, அவநம்பிக்கை மற்றும் வெறுப்பு மனப்பான்மையிலிருந்து தேசத்தை மாற்றி, எதிர்கால நம்பிக்கைக்கு அஸ்திவாரமாகத் திகழும், தன்னம்பிக்கையையும், சுயசார்பையும் வளர்க்க அயராது பாடுபட்டு வருகிறோம். உங்களை இங்கு சந்தித்த பிறகு, நான் மேலும் அதிக சக்தி பெற்றதாக உணர்கிறேன். தேசத்தின் வளர்ச்சிக்காக, ஏழைகளின் நல வாழ்விற்காக இரவும் பகலும் உழைக்கும் உங்களைப் போன்ற ஒரு குழுவினரை கொண்டுள்ள நான் உண்மையாகவே பேறு பெற்றுவன் என உணர்வதுடன், அதற்காக எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது கடின உழைப்பின் மூலம், இன்று தேசம், மின்சக்தி குறைபாடின்றி, நிலக்கரி தட்டுப்பாடின்றி, உலக அரங்கில் நமது நாட்டின் உருவத்தினை மாற்றி, சக்திமிகுந்த நாடாகத் திகழ்ந்து வருவதற்காக எனது நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலியில், பழுப்பு நிலக்கரி 1935–ம் வருடம் கண்டறியப்பட்டது மட்டுமல்லாமல், இந்நிலம் அனைத்தும், சுதந்திரப்போராட்ட வீரர் ஜம்புலிங்க முதலியாருடையதாக இருந்தது என்று அறிந்தபோது நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஜம்புலிங்க முதலியார் அவர்கள் தனது நிலத்தினை இலவசமாக வழங்கியதன் மூலம், என்.எல்.சி. நிறுவனம், மின்சக்தி தயாரித்து, நமது நாட்டு மக்களுக்கு, சிறந்த நற்பணி ஆற்றிவருகிறது. 60 ஆண்டுகளுக்கு முன், அதாவது 1956ம் ஆண்டு, என்.எல்.சி. நிறுவனம், தற்போது உள்ளதைப் போன்று சிறந்த சக்திவாய்ந்த நிறுவனமாகத் திகழும் என்று எவராலும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். இந்த அபார வளர்ச்சிக்கு, தங்களது இன்னுயிரை ஈந்த, இரத்தம் சிந்தி இரவு, பகலாக வேலை பார்த்த, முன்னாள் ஊழியப் பெருமக்களுக்கும், தற்போது பணிபுரியும் 15000 ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்நிறுவனத்தின் உயரதிகாரிகளுடன் உரையாடியபோது, இன்னும் 7 முதல் 10 வருட காலத்தில், இந்நிறுவனம் காணவிருக்கிற வளர்ச்சித் திட்டங்களை அவர்கள் கூறியபோது மிகவும் ஈர்க்கப்பட்டேன். 2019ம் ஆண்டிற்குள் வரவிருக்கும் திட்டங்கள், குறிப்பாக, புதுப்பிக்கவல்ல ஆற்றல்துறை சார்ந்த பல்வேறு திட்டங்கள் எனக்கு மிகவும் உற்சாகத்தையும், மனநிறைவையும் மற்றும் ஊக்கத்தையும் அளிக்கின்றன. தங்களை சந்தித்தப் பிறகு, எனது



முதல் சுரங்கத்தில் மரக்கன்று நடும்போது...

நம்பிக்கை இருமடங்காகியுள்ளது; ஆம்! 2019 அல்லது 2020–ம் ஆண்டு, இந்நிறுவனம் தனது இலக்குகளை எட்டி, நிச்சயமாக, நவரத்னா தகுதியிலிருந்து, மகாரத்னா தகுதி பெறும். என்.எல்.சி. நிறுவனம் மூலம் இப்பகுதி, பெரிய அளவிலான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வருகிறது. உண்மையில், எப்பொழுதெல்லாம், சுரங்கங்கள் பற்றி அமைச்சகத்தில் ஆலோசிக்கிறோமோ, அப்பொழுது எல்லாம் தரமான சுரங்கங்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த சுரங்கங்கள் என்றால் முதலில் இருப்பது நெய்வேலி சுரங்கங்கள்தான். நான் ஒரு மணி நேரம் முன்பாக, எனது மனைவியிடம் பேசும்போது, நெய்வேலியிலுள்ள பசுமைப் பூங்கா, பசுமை சுற்றுலா பூங்கா அனைத்தையும் ஒருங்கிணைத்து, இங்கு காணும் வாய்ப்பினைப் பெற்றேன் என்று கூறியதை, திரு ஆச்சார்யா அவர்கள் நன்கு அறிவார். இங்கு உள்ள சுரங்கங்களைப் போன்று எங்கும் நான் கண்டதில்லை. இந்த இடத்தினைக் காண என் மனைவியும் விரும்புவார் என்பதால், அடுத்த தடவை நான் என் மனைவியுடன் இங்கு வந்து, இப்பகுதியை காண்பேன் என்று தங்களிடம் நிச்சயமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம், சிறந்த முறையில் சுரங்க செயல்பாட்டினை மேற்கொள்வதன் மூலமும், கட்டுபட்ட செலவிற்குள் நிர்வகிப்பதன் மூலமும், அதிக அளவில் நேர்மையுடன் செயல்படுவதன் மூலமும், நமது பிற்கால சந்ததியினர் அதிக பலன் பெறும் வகையில், நம் முன்னோர்களிடமிருந்து இப்பகுதியைப் பெற்ற போது நிலவிய சூழலைக் காட்டிலும், ஓர் சிறந்தொரு சூழலை தற்போது உருவாக்கிக் கொடுத்துள்ளோம். இங்கு லட்சக்கணக்கான மரங்கள், மான் பூங்கா போன்றவற்றைக் காணும்போது, சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், நீங்கள் அதிக அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அடுத்த தடவை நான் இங்கு வரும்போது, ஒரு தாமரைக் குளத்தை காண்பேன் என்று உங்கள் நிர்வாகம் கூறியுள்ளது. தாமரை என்பது அரசியல் சம்மந்தப்பட்டது அல்ல. நாம் அனைவரும் தாமரை மலரை விரும்புகிறோம். நமது அனைத்து செல்வங்களுக்கும் காரணமாக இருக்கும் மகாலட்சுமி கோவிலுக்கு நாம் தாமரையை எடுத்து செல்வது போல், என்.எல்.சி. நிறுவனம் என்பவள் நமது மாதா..... மாதா லட்சுமி... ஆம்... நமக்கு வருமானத்தை தருகிறாள்; நமது அன்றாட வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகிறாள்; நமது குழந்தைகளின் எதிர்காலத்திற்கும் துணை புரிகிறாள். ஆகையால், இங்கு தாமரைக்குளம் அமைப்பதில் எவ்வித தவறும் நான் காணவில்லை. நீங்களும் அதை ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

பொதுத்துறை நிறுவனம் என்றாலே, திறமையுடன் செயல்படாது, நேர்மை இருக்காது, அதன் ஊழியர்கள் எப்போதும், திருப்தியின்றி தான் இருப்பர் என்ற, தவறான கண்ணோட்டம் உள்ளது; அவ்வாறு இல்லை என்பதற்கு, என்னிடம் விவரங்கள் இருப்பினும், நான் இங்கு வந்து என்.எல்.சி. நிறுவனத்தைக் காணும்போது, அது மேலும் உறுதி செய்யப்படுகிறது. உங்களது நிறுவனத்தை நான் பார்த்த பிறகு, எனக்கு பொதுத் துறை நிறுவனங்கள் மேல் உள்ள நம்பிக்கை மேலும் அதிகமாகியுள்ளது. பொதுத்துறை ஊழியர்கள் நம்பகத்தன்மையுடன் செயல்படமாட்டார்கள் மற்றும் நாட்டின் நலனுக்காகப் பாடுபட மாட்டார்கள் என்ற, மக்கள் மத்தியில் நிலவும் தவறான கண்ணோட்டத்தை, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து துடைத்து எறிய வேண்டும்.

டெல்லியில் உள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களையும், நெய்வேலிக்கு அழைத்து வந்து, என்.எல்.சி. நிறுவனத்தினைப் பார்வையிடச் செய்வதன்மூலம், நிறுவன உற்பத்திக்கு மட்டுமல்லாமல், சுற்றுசூழலைப் பாதுகாக்க நீங்கள் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை வெளிப்படுத்தி சர்வதேச அளவில் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ள தட்பவெப்ப மாறுபாட்டிற்கு கூறப்படும் ஆலோசனைகள் இங்கு எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதை உலகமக்கள் அறிய வழிவகுக்கும் என்று, என்னுடைய சக ஊழியர்களிடம் நான் கூறியுள்ளேன். சுரங்கங்களை மூடவேண்டும்



முதல் அனல்மின் நிலைய விரிவாக்கத்தின் கட்டுபாட்டு அறையில்...

என்று உலகமே கூறிவரும்போது, என்.எல்.சி.யை பார்த்த பிறகு அவர்களது கருத்து மாறுபட்டு, அதிக சுரங்கங்களைத் திறக்க வேண்டும்; ஆனால், அவை அனைத்தும் என்.எல்.சி. சுரங்கங்கள் போன்று செயல்பட வேண்டும் என்று கூறுவர். சுற்றுச்சூழலை

மேம்படுத்துவது குறித்து அறிந்து கொள்ள, இந்தியாவின் பெரிய சுரங்க நிறுவனமான, கோல் இந்தியா நிறுவன அதிகாரிகளை நெய்வேலிக்கு சென்று என்.எல்.சி. நிறுவனத்தின் சுற்றுச் சூழல் பராமரிப்பு முயற்சிகளைக் கண்டறியுமாறு கேட்டுள்ளேன்.



தூய்மை இந்திய விழிப்புணர்வுப் பேரணியைத் தொடங்கி வைத்த பின், மாணவர்களிடையே, மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்ளும், மாண்புமிகு மத்திய அமைச்சர்

இந்த முயற்சிகள் அனைத்தும், தற்போதைய நிறுவனத் தலைவர், திரு ஆச்சார்யா மற்றும் முன்னாள் தலைவர் திரு சுரேந்திர மோகன் ஆகியோரால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவேன். எனக்கு, முன்னாள் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர்களைப் பற்றி தெரியாவிடினும், 60 வருட விடா முயற்சியினால்தான் இந்நிறுவனம், இன்று சிறப்பானதொரு நிலையை அடைந்துள்ளது என்று உறுதியாக கூறமுடியும். சுற்றுச்சூழல் சுற்றுலா பூங்கா, பசுமைப் பூங்கா, அழகான மான் பூங்கா ஆகியவற்றை சிறப்பாக உருவாக்கிய, உங்கள் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களை எனக்கு உதவிட அனுப்புமாறு உங்களது நிர்வாகத்தினை கேட்டுகொண்டுள்ளேன். சுரங்கம் வெட்டியபின் மீண்டும் நிரப்பப்பட்டு அங்கு பயிரிடும் பணி இங்கு சிறப்பாக நடைபெறுவதைப் போன்று, உங்கள் பொறியாளர்கள் மூலம், இந்தியாவில் உள்ள பல்வேறு சுரங்கங்களில், இதேபோன்று பூங்காகள் உருவாக்கப்படும்.

“ஒருவரது புத்திசாலித்தனத்தின் உண்மையான அடையாளம் அவர் பெற்ற அறிவு அல்ல, அவரது கற்பனைத் திறன்தான்” என்று ஈன்ஸ்டின் அவர்கள் கூறியது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதற்கு சான்றாக, என்.எல்.சி. நிறுவனம், தனது கற்பனை சக்தி மூலம் செய்து வரும் பணிகள், குறிப்பாக குறைந்த விலையில் மின்சாரம் வழங்கிவரும் அதே நேரத்தில், சுற்றுச்சூழலையும் மாசடையச் செய்யாது, மகாத்மாவின் கொள்கைகளைப் பின்பற்றிவரும் உங்களது நிர்வாக செயல்பாட்டினை உலகமே கண்டு வியக்கும். நமது தேசப் பிதா, மகாத்மா காந்தி அவர்கள், நீர்நிலைகளை உபயோகிக்கும் வழிகள், மாசுபடுதல் ஆகிய சுற்றுச்சூழல் குறித்த, தனது கருத்தினை அவ்வப்போது, கூறிவந்துள்ளார். “ஒருவர் எவ்விதமான, மாற்றத்தினை விரும்புகிறாரோ, அதற்கு முன் தன்னை அந்த மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டுமல்லாது, வெறும் உபதேச வார்த்தைகளுடன் தனது கருத்தினை பதிவு செய்யக்கூடாது” என்ற அவரது கூற்றிற்கேற்ப, என்.எல்.சி. நிறுவனம் தனது சிறப்பான செயல்பாட்டின் மூலம், சுற்றுச்சூழலை பாதுகாத்து, உலக அளவில் நமது தேசம் சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம் அளித்துவருவதை, எடுத்து கூறும் வகையில் செயல்பட்டு வருகிறது. எனது தற்போதைய வருகை, குறுகிய காலம் மட்டுமே அமைந்தாலும், எனது அடுத்த வருகை, ஒரு இரவு தங்கி, உங்கள் அனைவரிடமும் அதிக நேரம் செலவிட்டு, ஒவ்வொருவரையும் நன்கு அறியும் வகையில், அமைவது மட்டுமல்லாமல், வெகு சிறப்பாக பணிபுரியும் சிலரை பாராட்டும் வகையிலும் அமைந்திருக்கும் என்று திரு ஆச்சார்யா அவர்களிடம் இத்தருணத்தில் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

அக்டோபர் 2–ம் தேதியிலிருந்து, தூய்மை பாரத இலக்கை நோக்கி செயல்பட்டு வருகிற மாணாக்கர்களுக்கு எனது பாராட்டுகள். இதன் மூலம் நெய்வேலி மட்டுமல்லாது, அதனை சுற்றியுள்ள கிராமங்களும் தூய்மைப்படுத்தப்படவிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக, இன்று சுமார் 1000 மாணாக்கர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியைத் துவக்கி வைத்ததில் பெருமையடைகிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமரின் கனவை நனவாக்க என்.எல்.சி. நிறுவனம், அயராது பாடுபட்டு வருவதைக்கண்டு மகிழ்ச்சியாக உள்ளது. நான் நெய்வேலியில் இறங்கிய உடன், முதலில் கண்டது அதிதூய்மை. அதற்காக, நான் உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். உங்களின் இந்த செயல்பாடு, பாரத தேசத்தின் அதிவேக வளர்ச்சிக்கு, ஊக்கப்படுத்துவதாக அமைவது மட்டுமல்லாமல், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு மோடி அவர்கள் தலைமையில், சிறப்பான வளர்ச்சி பெற்று, நாட்டின் சரித்திரம் மாற்றப்பட்டு எழுதும்போது, அதில் நெய்வேலியின் பங்கு பிரதானமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பண்டிகை காலம் ஆரம்பமாகிவிட்டது. இந்த நல்ல தருணத்தில் நான் இங்கு வந்திருப்பதை பெருமையாகக் கருதுகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது நவராத்திரி மற்றும் தீபாவளி வாழ்த்துகளைத்



ஊடகவியலாளர்களிடையே உரையாற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர்

தெரிவித்துகொள்கிறேன். அடுத்து கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் வரவிருக்கின்றன. இந்த இனிமையான நேரத்தில் உங்கள் அனைவருக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி.

நமது நிறுவனத் தலைவருக்கு கௌரவ முனைவர் பட்டம்

நமது நிறுவனத் தலைமைப் பொறுப்பினை வகிக்கும் வாய்ப்பினைப் பெற்ற, முதல் மனித வள நிபுணர்

நமது நிறுவனத் தலைவர், திரு சரத் குமார் ஆச்சார்யா அவர்களுக்கு, சென்னை, சத்தியபாமா பல்கலைக்கழகம், 16.09.2016 அன்று, நடைபெற்ற தனது வெள்ளி விழா பட்டமளிப்பு நிகழ்ச்சியில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

திரு ஆச்சார்யா அவர்கள், நாட்டின் வளர்ச்சிக்கு சிறப்பானப் பங்களித்தமைக்காகவும், அபூர்வமான தலைமைத்துவத் திறன் பெற்றுள்ளமைக்காகவும், மனிதவளத்துறையில் பல்வேறு புதுவித யுக்திகளை அறிமுகப்படுத்தியதற்–காகவும், அவரைக் கௌரவப்படுத்தும் வகையில், சென்னை சத்தியபாமா பல்கலைக்கழக நிர்வாகம், நமது நிறுவனத் தலைவருக்கு, நிர்வாகத்துறையில், கௌரவ முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது.



திருமதி ரெமிபாய் ஜேப்பியார், நமது நிறுவனத் தலைவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறார்

பல்கலைக்கழக உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட, கூடங்குளம் அணுமின் திட்ட இயக்குநர் திரு R.S. சுந்தர் முன்னிலையில், பல்கலைக்கழக வேந்தர், திருமதி ரெமிபாய் ஜேப்பியார் அவர்கள், இச்சிறப்புமிக்க கௌரவத்தினை, திரு சரத் குமார் ஆச்சார்யா அவர்களுக்கு வழங்கினார்.

Dr. ஆச்சார்யா அவர்கள், நமது நிறுவன மனிதவளத் துறை இயக்குநராக, 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் பொறுப்பை ஏற்று, தனது தனித்துவமிக்க மேலாண்மைத் திறன் மூலம், நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக, 01.10.2015 முதல் பதவி வகித்து வருகிறார்.

புகழ்பெற்ற மத்திய அரசின் நிறுவனங்களான, BHEL, NTPC, NTPC-SAIL, NLC போன்ற நிறுவனங்களின், மனிதவளத்துறையில், உயர் பதவி வகித்து, 35 வருட அனுபவம் பெற்றுள்ள Dr. ஆச்சார்யா, தனது அபாராமான நிர்வாகத்திறமை மூலம், நாட்டின் தலைசிறந்த மனிதவள நிபுணர்களில் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார். ஒடிசா, ராவென்ஷா கல்லூரி மற்றும் உத்கல் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ள இவர், தனது துறையின் மீது உள்ள ஆழ்ந்த அறிவின் மூலம், ஊழியர்கள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஆகிய மூன்று காரணிகளின் மேம்பாட்டிற்கு, சிறப்பானப் பங்களித்து, மனிதவளத் துறையில், மேதையாக உயர்ந்துள்ளார்.

Dr. ஆச்சார்யா அவர்கள், வாழ்நாள் சாதனையாளர் விருது உள்பட, பல்வேறு அமைப்புகளால் வழங்கப்பட்ட 12 விருதுகளைப் பெற்றுள்ளார். இந்திய நாட்டின் பிரபலமான 30 மனிதவள நிபுணர்கள் என்ற புத்தகத்தில், இடம்பெற்றுள்ள ஆச்சார்யா அவர்கள், பல்வேறு முன்னணி வர்த்தகம் மற்றும் மேலாண்மைக் கல்வி நிலையங்களுக்கு சென்று கௌரவ விரிவுரையாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

நவரத்னா தகுதி பெற்ற, என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தின் 60 ஆண்டுகால வரலாற்றில், ஒரு மனிதவளத் துறை நிபுணர், தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகப் பொறுப்பெற்றுள்ளது இதுவே முதல் முறையாகும். நமது நிறுவனம் தனது வைரவிழாவினைக் கொண்டாடி வரும் இந்நேரத்தில், கிடைத்துள்ள இந்த கௌரவம், நமது நிறுவனத்திற்கு கிடைத்த விலைமதிப்பற்ற விருது என்பதில் ஐயமில்லை. பட்டமளிப்பு விழாவில், பல்கலைக்கழகத்தின் இயக்குநர்கள், முனைவர் மேரி ஜான்சன் மற்றும் முனைவர் மரியசீனா ஜான்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

நமது நிறுவனத் தலைவரால் கௌரவம் பெற்ற இரு விருதுகள்!

சிறந்த தலைமை அதிகாரிக்கான விருது


ஜார்கண்ட் மாநில அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை, புதுடில்லி, எலிட்ஸ் டெக்னோமீடியா அமைப்புடன் இணைந்து, 04.10.2016 அன்று ராஞ்சியில் நடத்திய 2வது ஈ–ஜார்கண்ட் உச்சிமாநாடு–2016ன், துவக்க விழாவில், நமது நிறுவனத்தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்களுக்கு, ''பொதுத்துறை நிறுவன சிறந்த தலைமை அதிகாரிக்கான விருதினை'' வழங்கியுள்ளது. மாண்புமிகு ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் திரு ரகுபர் தாஸ் இவ்விருதினை வழங்க Dr. ஆச்சார்யா சார்பில், திரு R. மோகன், ED/Commercial பெற்றுகொண்டார். தனது சிறப்புமிக்க தலைமைத்துவத் திறன் மூலம், நிறுவனத்தின் வளர்ச்சிக்கு, சிறப்பான முயற்சிகள் மேற்கொண்டதற்காக இவ்விருது, Dr. ஆச்சார்யா அவர்களுக்கு வழங்கப்பட்டது.



வாழ்நாள் சாதனையாளர் விருது

புகழ்பெற்ற வணிக இதழான, ''பிஸ்னஸ் வேர்ல்டு'', நமது நிறுவனத் தலைவர், Dr. ஆச்சார்யா அவர்களின், சிறப்புமிக்க தலைமைப் பண்பு மற்றும் மனிதவளத்துறைக்கு, அவர் ஆற்றி வரும் மகத்தானப் பங்களிப்பு ஆகியவற்றைக் கௌரவிக்கும் வகையில் ''வாழ்நாள் சாதனையாளர் விருது'' வழங்கியுள்ளது. மும்பையில் 04.10.2016 அன்று நடைபெற்ற, ''2–வது பிஸ்னஸ் வேர்ல்டு விருதுகள்–2016னை' வழங்கும் விழாவில், இவ்விருதினை, நமது நிறுவனத் தலைவர் சார்பாக, திரு Y.M.S. பிள்ளை, DGM/CP&PM, பெற்றுக்கொண்டார். இவ்விருது, மனிதவளத்துறையில், சிறந்த பங்களிப்பினை வழங்கிய, நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரிகளுக்கும், சிறந்த ஆளுமைத்தன்மை உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநரின் மடல்



எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே
அனைவருக்கும் வணக்கம்; நமஸ்காரம்.

நாம் 2017ம் ஆண்டினை வரவேற்கத் தயாராகவிருக்கிறோம். புதிய ஆண்டினை ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் எதிர்நோக்கும் இவ்வேளையில், கடந்த ஆண்டு நாம் சந்தித்த பல ஏற்றங்களையும், இறக்கங்களையும் ஆய்வு செய்து, நமது அனுபவத்தையும், ஆற்றலையும், புதிய வாய்ப்புகளை வழங்கவிருக்கும் இப்புத்தாண்டு நமக்கு ஒளிமயமானதாக அமைய பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நிறைவடைந்த ஆண்டு, பல்வேறு வகைகளில் நமக்கு நிகழ்வுகள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்தது. நமது நிறுவனத்தின் பெயரை 'என்எல்சி இந்தியா' என மாற்றம் செய்துள்ளதுடன், 'மின் சக்தியை உற்பத்தி செய்து புன்னகையை உருவாக்குவோம்' என்ற சொற்றொடருடன் புதிய இலட்சினையை வடிவமைத்துள்ளோம். நமது கனவுகள் நனவாகும் வகையில், அனைவரும் இணைந்து உழைத்து, இன்று நமது நிறுவனத்தை புதிய உச்சத்திற்கு எடுத்து வந்துள்ளதுடன், தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வரும் நிறுவனம் என்ற ஒரு புதிய அடையாளத்தையும் நாம் உருவாக்கியுள்ளோம்.

உற்பத்தித் துறையைப் பொறுத்தவரையில், ராஜஸ்தான் மாநிலம், பர்சிங்சர் மின் நிலையம் தற்போது தடங்கலின்றி இயங்கி வருகிறது. இது போன்று, நெய்வேலி இரண்டாம் அனல்மின் நிலைய விரிவாக்கமும் எவ்வித இடையூறின்றி செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய திட்டங்களை அமல்படுத்துவதில் நாம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். உத்திரப் பிரதேச மாநிலம், கான்பூர் மாவட்டத்தில் NUPPL கூட்டு நிறுவனத்தின் மூலம், நாம் அமைத்து வரும் 1980 மெகாவாட் அனல்மின் நிலையம் மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தில் பர்சிங்சர் மின் நிலைய விரிவாக்கம் மற்றும் பித்நோக் பசுமை வயல் மின்நிலையம் ஆகிய 500 மெகாவாட் மின் திட்டங்களுக்கு நாம் பணி ஆணைகள் வழங்கியுள்ளோம். மத்திய அரசு, ஒடிசா மாநிலத்தில் நமக்கு வழங்கியுள்ள, ஆண்டிற்கு 2 கோடியே 5 லட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தலபிரா நிலக்கரி சுரங்கத்தின்மூலம், அப்பகுதியில் நிலக்கரியில் இயங்கும் 4000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தினை இரண்டு கட்டமாக அமைக்கத் திட்டமிட்டு வருகிறோம். அத்துடன் நெய்வேலியில் 1380 மெகாவாட் திறன் கொண்ட பழுப்பு நிலக்கரியில் இயங்கும் மின் நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நிறைவு பெறவிருக்கும் நிலையில், வரும் மார்ச் மாதம் இதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கும் அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது. புதுப்பிக்கவல்ல ஆற்றல் துறையில், நமது விரிவாக்கங்களைப் பொறுத்த வரையில், நெய்வேலியில் 130 மெகாவாட் சூரிய ஒளி மின் நிலையத்திற்கான பணிகள் நடைபெற்று வருவதுடன், தமிழகத்தில் 500 மெகாவாட், ஒடிசாவில் 250 மெகாவாட் திறன் கொண்ட சூரியமின் நிலையங்கள் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களில் தலா 1000 மெ.வா. திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையங்கள் அமைக்கவும், தமிழகத்தில் கூடுதலாக 200 மெ.வா. திறன் கொண்ட காற்றாலை மின்நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

உற்பத்தி செயல்பாடுகளைப் பொறுத்த வரையில் நமது வளர்ச்சி நிலையானதாக இருப்பினும், மின் பகிர்மான நிறுவனங்கள் மற்றும் மாநில மின்வாரியங்களுக்கு நாம் ஒதுக்கீடு செய்யும் மின்சக்தியைவிட, அவர்கள் குறைவாகப் பயன்படுத்துவதால், கடந்த ஒன்பது மாதங்களாக நாம் மின்சக்தியை குறைவாக உற்பத்தி செய்யும் நிலைக்கு சென்றதன்மூலம், நிதிநிலை வளர்ச்சியில் பெரிய தாக்கத்தை சந்தித்து வருகிறோம். இதன் மூலம் உருவாகிய சவால்களை சமாளிக்க, தேவைப்படும் பகுதிகளுக்கு மின்சாரத்தை நேரடியாக விற்பனை செய்யும் புதிய முறையைப் பயன்படுத்தி, நமது இழப்பில் ஒரு பகுதியை ஈடுகட்டி வருகிறோம். இந்த கடினமான சூழ்நிலையானது, உற்பத்தி செலவைக் கட்டுப்படுத்தி, மிகக் குறைந்த விலையில் மின்சக்தியை விற்பனை செய்தால் மட்டுமே தற்போதைய நிலையில் நாம் லாபம் ஈட்டமுடியும் என்ற பாடத்தை, நமக்குக் கற்றுத் தந்துள்ளது. மேலும் பசுமை ஆற்றல், புதுப்பிக்கவல்ல எரிசக்தி போன்ற துறைகள் வளர்ச்சியடைவதை மனதில் கொண்டு, அத்துறைகளிலும் நமது செயல்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும். ஏனெனில், இனிவரும் காலங்களில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரியில் இயக்கப்படும் மின் நிலையங்களை மட்டும் நாம் நீண்ட காலம் சார்ந்திருக்க முடியாது.

தற்போதைய சூழலில், வர்த்தகத்துறை மிக அதிக போட்டிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில் நாம் வளர்ச்சி பெற நமது உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் அதிகரித்து உற்பத்தி செலவினைக் குறைக்க பல்வேறு வழிகளில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பழுப்பு நிலக்கரி மற்றும் மின் உற்பத்தி, குறிப்பாக கடந்த 2016ம் ஆண்டில் நாம் சற்று பின்தங்கியிருந்த பாதுகாப்புத்துறை ஆகிய அனைத்திலும், புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், நமது செயல் திறனை அதிகரித்து, தரத்தினை மேம்படுத்தி, உற்பத்தி செலவினைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நமது தொழில் சார்ந்த அறிவினை மேம்படுத்தும் வகையில், மனிதவளம், சுரங்கத்துறை, மின் உற்பத்தித் துறை மற்றும் ஒப்பந்த மேலாண்மை ஆகிய பிரிவுகளில் தேசிய அளவிலானக் கருத்தரங்குகளை நாம் நடத்தியதுடன், பல்வேறு துறைகளில் நாட்டின் தலை சிறந்த நிபுணர்களை அழைத்து வந்து தலைமைப் பண்பு குறித்த பல பயிற்சிகளையும் நமது உயர் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளோம். இதுபோன்றக் கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புகளும் இப்புதிய ஆண்டிலும் தொடரவிருக்கின்றன. அந்த வகையில், நிதித்துறை தொடர்பான தேசியக் கருத்தரங்கு, அடுத்து நடைபெறவிருப்பதுடன், நாட்டின் தலைசிறந்த நிபுணர்களான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி மற்றும் சத்குரு ஸ்ரீ ஜக்கி வாசுதேவ் ஆகியோர், முறையே இவ்வாண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் நெய்வேலிக்கு வருகை தந்து சொற்பொழிவாற்ற விருக்கின்றனர். எனவே இது போன்ற செயல்களின்மூலம் நமது சமூகத்தை பன்முகத்திறன்மிக்க சமுதாயமாக மாற்ற நாம் முயற்சி செய்து வருகிறோம்.

ஒரு சமூகப் பொறுப்புணர்வு மிக்க நிறுவனம் என்ற முறையில், ஒருங்கிணைந்த வகையில் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக, சுற்றுப்புற கிராமங்களில் சுகாதாரம், கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருவதுடன், பழுப்பு நிலக்கரி அகழ்ந்தெடுத்த பின்னர் மீண்டும் நிரப்பப்பட்ட பகுதியில் இயற்கை மற்றும் நுண்ணுயிர் விவசாயம், மீன் வளர்ப்பு, நீர்வள ஆதாரத்தை மேம்படுத்துதல், பசுமைச் சுற்றுலா, மூலிகைப் பண்ணை மற்றும் தோட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமரின், 'திறன்மிகு இந்தியா' என்ற நாட்டின் வளர்ச்சியில் முக்கிய இடம்பெறும் இலட்சியத்தினை நிறைவேற்றும் வகையில் நமது கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தின் மூலம் நாம் பல்வேறு பயிற்சிகளை வழங்கிவருவதுடன், தொழிற்பயிற்சி நிலையங்களையும், ஒருங்கிணைந்த பயிற்சி நிலையங்களையும் நடத்தி வருவதுடன் நில்லாது, சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ஒரு திறன் மேம்பாட்டு மையத்தை உருவாக்கி, முதற்கட்டமாக, இப்பகுதி இளைஞர்களின், குறிப்பாக நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்கள் பயன் பெறும் வகையில், சுரங்கத்துறையில் பட்டயப் படிப்பினைத் தொடங்கியுள்ளோம்.

நமது நாட்டின் வளர்ச்சிக்காக நம்மை அர்ப்பணிப்பதன் மூலம், ஒரு வலிமைமிக்க நாடாக இந்தியா உருவாக வேண்டும் என்ற நமது கனவினை நனவாக்குவோம். இவ்வாண்டின் அனைத்து நாட்களும் நல்ல நாட்களாக அமைய வேண்டும் என்ற நமது நல்ல எண்ணங்கள் நிறைவேற உழைப்போம். 'நமது வருகையை மிகவும் மென்மையாக, அதே நேரத்தில் உரக்க இவ்வுலகிற்கு அறிவிக்க வேண்டுமெனில், அது நமது செயல்பாடுகள் மூலமாகத்தான் இருக்க வேண்டும்.' நமது செயல்பாடுகள் புதிய உச்சங்களை அடைய நம்மை நாம் அர்ப்பணித்திடுவோம். மனித சமுதாயத்தின் நலனிற்காக, பெரிய அளவில் திட்டமிட்டு, பெரிய அளவில் செயல்படுத்தி அதனை சிறப்பாக நிறைவேற்ற நாம் முயற்சிகள் மேற்கொண்டுவரும் இத்தருணத்தில், வரவிருக்கும் 2017ம் புத்தாண்டு உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் நலனைக் கொணர வாழ்த்துகிறேன்.

2017ம் ஆண்டும், நமது நிறுவனம் சாதனைகள் பல படைக்கவிருக்கும் ஆண்டாக அமையவுள்ளது என்பதில் ஐயமில்லை.

ஜெய் என்எல்சி இந்தியா, ஜெய்ஹிந்த்.

வாழ்த்துகளுடன்

சரத் குமார் ஆச்சார்யா

உத்திரப் பிரதேசத்தில் 1980 மெ.வா மின்நிலையத்திற்கானக் கட்டுமானப் பணிகள் தொடக்கம்



கதாம்பூர் மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை, மாண்புமிகு மத்திய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் தொடங்கி வைக்கின்றனர்

சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் துறையில் கடந்த 60 ஆண்டு காலம் அனுபவம் பெற்றுள்ள நமது நிறுவனம், நெய்வேலி என்ற நமது புவியியல் எல்லையைக் கடந்து நாட்டின் பல பகுதிகளிலும் திட்டங்களைத் தொடங்கி வருகிறது. அந்த வகையில் 2010ம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம், பர்சிங்சரில் சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையத்தை செயல்படுத்திய நமது நிறுவனம், அடுத்த கட்டமாக, தூத்துக்குடியில் 2015ம் ஆண்டு, நிலக்கரியில் இயங்கும் அனல்மின் நிலையத்தைத் தொடங்கியது. இந்நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் நமது திட்டங்களை விரிவுபடுத்தும் நோக்கத்தில், உத்தர பிரதேச மாநிலத்தில் 1980 மெ.வா திறன்கொண்ட நிலக்கரியில் இயங்கும் அனல்மின் நிலையத்தைத் துவங்கவுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த, நமது நிறுவனமும் உத்தர் பிரதேஷ் ராஜ்ய வித்யூத் உத்பாதன் நிகாம் நிறுவனமும் (UPRVUNL) இணைந்து ஒரு கூட்டு நிறுவனத்தை உருவாக்கி, உத்திரப் பிரதேச மாநிலம், கதாம்பூரில் மின்நிலையம் தொடங்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 06.10.2012 அன்று கையெழுத்தானது. அதனைத் தொடர்ந்து 'நெய்வேலி உத்தர் பிரதேஷ் மின் நிறுவனம்' என்ற கூட்டு நிறுவனம் 09.11.2012 அன்று தொடங்கப்பட்டது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இத்திட்டத்திற்கான இறுதி அனுமதியை 20.07.2016 அன்று வழங்கியது.



நமது நிறுவனத் தலைவரை கௌரவிக்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர்

இதன் அடுத்த கட்டமாக, கதாம்பூர் வட்டம், லகூரிமாவ் கிராமப்பகுதியில் 20.10.2016 அன்று நடைபெற்ற ஒரு விழாவில், மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) திரு பியூஷ் கோயல் மற்றும் கான்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் இந்த மின்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய உணவு பதனிடுதல் துறை இணை அமைச்சர் சாத்வி நிரஞ்ஜன் ஜோதி, மாண்புமிகு உத்திரப் பிரதேச திட்டம் மற்றும் மின் துறை அமைச்சர் திரு சைலேந்திர யாதவ், திரு தேவேந்திர சிங் (போலே சிங்), MP, திரு ரகுநந்தன் சிங், MLA, திரு சதீஷ் மஹானா, MLA, நமது நிறுவனத் தலைவர் Dr. சரத் குமார் ஆச்சார்யா, UPRVUNL நிறுவன மேலாண் இயக்குநர் திரு A.P.மிஷ்ரா மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நமது இயக்குநர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர்தாஸ், திரு V. தங்கபாண்டியன், நமது நிறுவனம் மற்றும் UPRVUNL நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பணியாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

கதாம்பூர் அனல்மின் நிலையத்தின் முக்கிய அம்சங்கள்

உற்பத்தி அளவு	: நிலக்கரியில் இயங்கும், சூப்பர் கிரிட்டிக்கல் தொழில்நுட்ப வகையிலான 1980 மெ.வா (3x660 மெ.வா) அனல் மின் நிலையம்
அமைவிடம்	: உத்திரப் பிரதேச மாநிலம், கான்பூர் நகர் மாவட்டம், கதாம்பூர் வட்டம், லகூரிமால் கிராமப்பகுதி (25° 58' N, 80° 10'E)
செயலாக்கம்	: என்எல்சி இந்தியா நிறுவனம், உத்தர் பிரதேஷ் ராஜ்ய வித்யுத் உத்பாதன் நிறுவனத்துடன் இணைந்து 51: 49 என்ற முதலீட்டு விகிதத்தில் தொடங்கியுள்ள நெய்வேலி உத்தர் பிரதேஷ் பவர் நிறுவனம் என்ற கூட்டு நிறுவனத்தின் மூலம் இந்த மின் திட்டம் அமைக்கப்படுகிறது
மதிப்பீடு	: ரூ.17,237.80 கோடி [30% நிறுவன நிதியிலிருந்தும், 70% கடன் தொகை மூலமும் திரட்டப்படும்]
கால அளவு	: அரசு அனுமதி வழங்கிய தினத்திலிருந்து, மூன்று மின் உற்பத்திப் பிரிவுகளும் முறையே 52வது, 58வது மற்றும் 64வது மாதங்களில் உற்பத்தியைத் தொடங்கும்.
நிலக்கரி தேவை	: ஆண்டிற்கு 113.50 லட்சம் டன்
தேவைப்படும் நிலப்பரப்பு	: 2,500 ஏக்கர் (தேவையான நிலங்களை கையகப்படுத்த, மாநில அரசு அனுமதி வழங்கிய நிலையில், ஏற்கனவே 1828 ஏக்கர் பரப்பிலான தனியார் நிலங்களை கையகப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது)
நீர் தேவை	: விநாடிக்கு 80 கன அடி (மாநில அரசு இத்திட்டத்திற்குத் தேவையான நீரை பித்னு கஸ்பா, மேற்கு அலகாபாத் கிளை வாய்க்காலிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது)
மின்சக்தி எடுத்துச் செல்பவர்கள்	: இம்மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை எடுத்துச் செல்ல, உத்திரப் பிரதேச மின் விநியோக நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.
பயன்பெறும் மாநிலங்கள்	: மத்திய மின்சக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, உத்திரப்பிரதேசம் மற்றும் அருகில் உள்ள இதர மாநிலங்கள் பயன் பெறும்.
நிலக்கரி ஆதாரம்	: ஜார்க்கண்ட் மாநிலம், துன்கா மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தெற்கு பச்வாரா நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரி பெறப்படும். இருப்பினும், தற்போது இத்திட்டத்திற்காக, இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியைப் பயன்படுத்தி இயக்க மத்திய மின்சக்தி அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
கொதிகலன்	: சூப்பர் கிரிட்டிகல் தொழில்நுட்ப வகை
டர்பைன் ஜெனரேட்டர்	: 3,000 RPM மல்டி சிலிண்டர் ரீஹீட் கன்டென்சிங் வகை
புகை போக்கி	: மூன்று பிரிவுகளுக்குமான 275மீ உயரம் கொண்ட ஒரே புகை போக்கி
குளிரூட்டும் கோபுரங்கள்	: இயற்கை முறையில் குளிரூட்டும் வகையிலான 3 கோபுரங்கள்

மனிதவளத் துறையின் புதிய இயக்குநரை மின்மலர் வரவேற்கிறது



நமது நிறுவனத்தில், மனிதவளத்துறை தலைமைப் பொதுமேலாளராக, இதுவரைப் பணியாற்றி வந்த திரு. R.விக்ரமன் அவர்கள், நமது மனிதவளத்துறை இயக்குநராக 09.12.2016 அன்று பொறுப்பெற்றுள்ளார்.

புகழ்பெற்ற காரைக்குடி, அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரியில், இயந்திரப் பொறியியல் பிரிவில் பட்டம் பெற்றுள்ள திரு விக்ரமன் அவர்கள், வர்த்தக மேலாண்மைத்துறையில் பட்டமேற்படிப்பு பயின்று, பல்கலைக்கழக அளவில் இரண்டாவது தரம் பெற்றவர். என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தில், பயிற்சி அதிகாரியாக தனது பணியைத் தொடங்கி, 30 ஆண்டுகளுக்கு மேல் அர்ப்பணிப்புடன் பணியாற்றி, தனது கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் நிர்வாகத் திறன் மூலம் ஒரு முத்திரையைப் பதித்து, இன்று நிறுவனத்தின் இயக்குநர் என்ற உயரியநிலையை இவர் பெற்றுள்ளார்.

தொடக்கத்தில், திரு விக்ரமன், நெய்வேலி இரண்டாம் அனல்மின் நிலையத்தில், இரண்டாவது கட்டமாக அமைக்கப்பட்ட 4 மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவும் பணியில் ஈடுபட்டு, அத்திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குமுன், அனுமதிக்கப்பட்ட தொகையைவிட குறைந்த தொகையில், வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு முக்கியப் பங்காற்றினார். மேலாண்மைத் துறையில் பெற்ற உயர்கல்வி மூலம், பின்னர் திரு விக்ரமன், மனித வளத்துறையில், தனது பணியைமாற்றிக் கொண்டார். நமது தலைமை அலுவலகத்தின், மனிதவளத் துறையில் சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றும் அரியவாய்ப்பினைப் பெற்ற அவர், தனது அபாரமான நிர்வாகத்திறன் மூலம், பல்வேறு நவீன நடைமுறைகளை, நிறுவனத்தில் செயல்படுத்த முக்கியக் காரணமாகத் திகழ்ந்தார். பின்னர், நெய்வேலி இரண்டாம் சுரங்கம் மற்றும் விரிவாக்கம், நெய்வேலி இரண்டாம் அனல்மின் நிலையம் ஆகிய தொழிலகங்களில் அடுத்தடுத்து பணியமர்த்தப்பட்டு, அத்தொழிலகங்களின் மனித வளத்துறைக்கு, தலைமை பொறுப்பு வகித்து திறம்பட செயலாற்றினார். பின்னர், தற்போதுவரை அவர், வகித்துவந்த பதவியான, அனல்மின் நிலையங்களுக்கான மனிதவளத்துறையின், ஒருங்கிணைந்த தலைமைப் பொறுப்பினை ஏற்றார்.

சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையங்களில் ஏற்பட்ட பல அவசர நிலைகளிலும், சவால் மிகுந்த தருணங்களிலும், இவர் திறம்பட செயல்பட்டு, ஊழியர்களின் வருகை இல்லாத நிலையிலும் கூட, தொழிலகங்களை உற்பத்தி இழப்பு ஏதுமின்றி இயங்கவழி வகுத்ததுடன், பணித்தளங்களில் பணியாளர்களுக்கிடையே ஒழுக்கம் மிக்கப் பண்புகளைக் கொணர காரணமாகவும் திகழ்ந்தார். இவர் பணிபுரிந்த இடங்களில் சிறப்பான தொழிலாளர் உறவு நிலவும் வகையில் பல முயற்சிகளையும், இவர் மேற்கொண்டார்.

திரு விக்ரமன், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத்துறைகளில், உள்நாட்டில் ஏராளமானபயிற்சிகளை பெற்றுள்ளதுடன், இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் நடைபெற்ற சிறப்பு தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சியிலும் பங்கேற்றுள்ளார். மேலும், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு அலுவலகப் பணிநிமித்தமாக சென்று வந்துள்ளார். தேசியநிர்வாக மேலாண்மை நிலையம் என்ற தொழில் ரீதியிலானஅமைப்பின் ஆயுட்கால உறுப்பினராகத் திகழும் இவர், அந்த அமைப்பின் நெய்வேலி மையத்தின் கௌரவ செயலாளராகவும் தற்போது செயல்பட்டு வருகிறார். மேலும், இந்த அமைப்பு, என்.எல்.சி. இந்தியா நிறுவனத்துடன் இணைந்து நடத்திய பல்வேறு கருத்தரங்குகள், பயிலரங்குகளில் இவரது செயல்திறன் மிக்கப் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது.

புதிய இயக்குநர் தனது அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெற மின்மலரின் வாழ்த்துகள்

தேசிய சூரிய மின்திட்ட இலட்சியத்தில் சிறப்பான பங்களிப்பினை வழங்கும் நமது நிறுவனம்

நெய்வேலியில் 130 மெ.வா. சூரிய மின் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

மத்திய அரசு, 2022ம் ஆண்டிற்குள், சூரிய சக்தி மூலம், 1 லட்சம் மெகா வாட், மின்னுற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து, அதற்காக, தேசிய சூரிய மின்சக்தி திட்ட இலட்சியத்தைக் கொணர்ந்துள்ளது. இதனை நிறைவேற்ற தனது பங்களிப்பினை வழங்கும் வகையில் சுமார், 4000 மெ.வா. சூரிய மின்னுற்பத்தித் திட்டங்களை, நமது நிறுவனம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக, நெய்வேலியில், 10 மெ.வா. திறன் கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் அமைத்தது. அடுத்தக்கட்டமாக, தெற்கு அந்தமான் தீவுகளில் அட்டம் பஹார் பகுதியில் 20 மெ.வா. சூரிய ஒளி மின்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதுடன், அடுத்து, வடக்கு அந்தமானில், கிஷோரி நகரில் 30 மெ.வா. சூரிய மின் திட்டம் அமைக்கப் பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.



பாரத மிகுமின் நிறுவனம் நெய்வேலியில் அமைக்கும் சூரியஒளி மின்திட்டத்திற்கான பூமி பூஜையின் போது, நமது நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குனர்கள்

பசுமை வழி மின்னுற்பத்தியின் அடுத்தக்கட்டமாக, நெய்வேலியில் அமையவிருக்கும், 130 மெ.வா. சூரியஒளி மின்னுற்பத்தி நிலையத்தின், ஒரு பகுதியான, 65 மெ.வா திறன் கொண்ட, சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையத்தை நெய்வேலியில், அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 17.08.2016 அன்று தொடங்கப்பட்டன. இத்திட்டத்தில், 40 மெ.வா. மின் நிலையம், 200 ஏக்கர் பரப்பளவில், வட்டம்–5 மற்றும் 6ன் வட பகுதிகளிலும், 25 மெ.வா, 125 ஏக்கர் பரப்பளவில், நெய்வேலி புதிய அனல்மின் நிலையம் அருகில் உள்ள, கொள்ளிருப்பு கிராமத்திலும், அமைக்கப்படவிருக்கின்றன. (ஒரு மெ.வா. மின் உற்பத்திக்கு, 5 ஏக்கர் பரப்பளவு). இத்திட்டத்தில், 2,38,600 சூரிய ஒளியைக் கிரகிக்கும் தகடுகள் பொருத்தப்பட்டு, ஒவ்வொரு தகடின் மூலம், அதிகபட்சமாக, 208–310 வாட் அளவிற்கு மின்சக்தி பெறப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் 03.06.2017 அன்று உற்பத்தி தொடங்கும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையம் மூலம் முதல் வருடம், 10 கோடியே, 82 லட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் உற்பத்தியாகும் அனைத்து மின்சக்தியும் TANGEDCO எனப்படும் தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் தமிழகத்திற்கு வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான, பொறியியல் வடிவமைப்பு, கொள்முதல் மற்றும் செயலாக்கம் ஆகியவை, பாரத மிகுமின் நிறுவனத்தின் திட்டப் பொறியியல் மற்றும் செயலாக்கப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான கட்டுமானப் பணியினை, நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் 17.08.2016 அன்று நமது இயக்குனர்கள் திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன் மற்றும் திரு P. செல்வகுமார் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

ரூ. 341 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவிருக்கும், இத்திட்டத்திற்கு, மத்திய நவீன மற்றும் புதுப்பிக்கவல்ல எரி சக்தித்துறை அமைச்சகம், ரூ.32.50 கோடியை மானியமாக வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, 29.07.2016 அன்று நடைபெற்ற நிகழ்வில், புதுடில்லியைச் சார்ந்த ஜாக்சன் பொறியியல் நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும், மற்றொரு 65 மெ.வா. சூரிய மின் திட்டத்திற்கு, நமது இயக்குனர்கள் திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ் மற்றும் திரு P. செல்வகுமார் முன்னிலையில், பூமி பூஜை நடைபெற்றது. வட்டம்–1 பகுதியில், 250 ஏக்கர் பரப்பளவில், 50 மெ.வா. மின் நிலையமும், எஞ்சிய 15 மெ.வா., நெய்வேலி விமான தளத்தின் அருகில், 75 ஏக்கர் பரப்பளவிலும், அமைக்கப்படவிருக்கிறது.

இம் மின் நிலையத்தில், 2,30,645 சூரிய ஒளித்தகடுகள் பொருத்தப்பட விருக்கின்றன. அதன் ஒவ்வொரு தகட்டின் மூலம், அதிகபட்சமாக 305–310 வாட் அளவு மின் உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. இங்கு, முதலாண்டு 10 கோடியே, 82 லட்சம் யூனிட் மின்சக்தி பெறப்பட உள்ளது. இங்கு உற்பத்தியாகும் அனைத்து மின்சக்தியும், TANGEDCO மூலம் தமிழகத்திற்கு வழங்கப்பட உள்ளது. இந்த திட்டம் 03.06.2017 அன்று முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 361 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு, மத்திய நவீன மற்றும் புதுப்பிக்கவல்ல எரி சக்தித்துறை அமைச்சகம், ரூ.65 கோடியை மானியமாக வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.


ஜாக்சன் நிறுவனம் நெய்வேலியில் அமைக்கும் சூரியஒளி மின்திட்டத்திற்கான பூமி பூஜையின் போது நமது இயக்குனர்கள்

மின்சக்தித்துறையின் இன்றைய நிலை குறித்த தேசியக் கருத்தரங்கு

நமது நிறுவனம், தனது வைரவிழா ஆண்டினை முன்னிட்டு, கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், 09.09.2016 மற்றும் 10.09.2016 அன்று, 'மின் உற்பத்தித் துறையின் இன்றைய நிலை மற்றும் எதிர்கால சவால்கள்' என்றக் கருத்தில் தேசியக் கருத்தரங்கினை நடத்தியது. மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் சிறப்பு செயலர், Dr. A.K. துபே அவர்கள், நமது இயக்குநர்கள் திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன் மற்றும் திரு P. செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில், இக்கருத்தரங்கினைத் துவக்கி வைத்தார்.

நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் தொடக்க விழாவில் கலந்துகொள்ள இயலாததை முன்னிட்டு, அவரது உரையினை, திரு S. திருநாவுக்கரசு, ED/CP&PM அவர்கள் வாசித்தார். Dr. ஆச்சார்யா தனது உரையில், ஒழுங்குமுறைக் கட்டுபாடுகளை புரிந்து கொள்ளல், உற்பத்தித்திறன், நிலைத்தன்மை, மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பிரச்சனைகள் ஆகியவற்றை நன்கு தெரிந்து கொள்வதற்காகவே, இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.


நமது இயக்குநர்கள் முன்னிலையில், கருத்தரங்கினைத் தொடங்கி வைக்கும், Dr. A.K. துபே

Dr. துபே அவர்கள், எளியவர்களும் வாங்கும் அளவிற்கு, மின்சக்தியின் உற்பத்தி செலவினைக் குறைக்க, நிபுணர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்றார். இந்நிகழ்வில், மின்னணு வடிவிலான விழா மலரினை Dr. துபே வெளியிட, முதல் பிரதியை நிதித்துறை இயக்குநர், திரு ராக்கேஷ் குமார் பெற்றுக்கொண்டார். இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கங்களை, மின்துறை இயக்குனர், திரு V. தங்கபாண்டியன் எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில், நமது நிறுவனம் உட்பட, பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் நடைபெற்ற 16 தொழில்நுட்ப அமர்வுகளில், மின்னுற்பத்தி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு, உயர் தொழில்நுட்பம், மின்சக்தி உற்பத்திச் செலவினைக் கட்டுபடுத்துதல், சுற்றுச்சூழல் பிரச்சினைகள், மின்னுற்பத்தி மற்றும் விற்பனையில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் போன்றத் தலைப்புகளில் 75 ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன.

இந்த இரு நாள் கருத்தரங்கில் பிரபல மின்னுற்பத்தி நிறுவனங்களைச் சார்ந்த, நிபுணர்களான, திரு D.K. ஜெயின், முன்னாள் இயக்குநர்/NTPC, திரு ஜெயதேப் நந்தா, COO/Adhani Power, திரு M.K. பரமேஸ்வரன், Station Head/IL&FS, திரு தாமஸ் ஜோசப், ED/NTPC மற்றும் நமது நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர்கள், திரு S. ராஜகோபால், திரு J. மகிழ்செல்வன், திரு V. சேதுராமன் மற்றும் திரு M.S. ரவீந்திரநாத், ஆகியோர் கலந்துகொண்டனர். கருத்தரங்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தக் கண்காட்சியினை, Dr. துபே அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தக் கருத்தரங்கின் நிறைவு நிகழ்ச்சி, 10.09.2016 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய, நமது நிறுவனத் தலைவர், Dr. ஆச்சார்யா அவர்கள், அவ்வப்போது, ஏற்படும் இடர்பாடுகளை, வென்றெடுப்பதன் மூலம், சிறந்த செயல் திறனுடன், ஒரு திட்டத்தை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும் என்றார். கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட, திரு R.C. ஸ்ரீவத்ஸவ், முன்னாள் இயக்குநர்/NTPC, புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையை மேம்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் மாசடையாமல், மின்சக்தி உற்பத்தி செய்வதுடன், மக்களால் வாங்கும் விலையில் விற்பனை செய்து, நமது தேசத்தை, முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்றார். இந்நிகழ்ச்சியில், மின் நிலையத் தொழில்நுட்பங்கள் தொடர்பாக, ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கும் வகையில், தயாரிக்கப்பட்ட ஒலி, ஒளி குறுந்தகட்டினை, Dr. ஆச்சார்யா அவர்கள் வெளியிட, திரு ஸ்ரீவத்ஸவ் பெற்றுக்கொண்டார். தமிழக அரசின், தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை, கடலூர் மண்டல இணை இயக்குநர், திரு R. ராஜசேகரன், இக்கருத்தரங்கில், அனல்மின் நிலையங்களில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து உரையாற்றினார். மின்துறை இயக்குனர் கருத்தரங்கின் முக்கிய அம்சங்கள் குறித்து எடுத்துரைத்தார்.


நிறைவு நிகழ்ச்சியில் நமது நிறுவனத் தலைவர் உரையாற்றுகிறார்


மின்னணு வடிவ விழா மலரினை வெளியிடும்போது...


பயிற்சி வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டக் குறுந்தகடினை வெளியிடும்போது...


Dr. A.K. துபே


திரு R.C. ஸ்ரீவத்ஸவ்


திரு D.K. ஜெயின்


திரு V. சேதுராமன்


திரு J. மகிழ்செல்வன்


திரு S. ராஜகோபால்


திரு V. தங்கபாண்டியன்


திரு S. சங்கரன்

தேசிய சேவை தினத்தை அனுசரித்த நமது நிறுவனம்



குருதி தான முகாம்

நமது நிறுவனம், தேசிய சேவை தினமான (சேவா திவாஸ்), 17.09.2016 அன்று, "ஆரோக்கியமான இந்தியா" என்றக் கருத்தை மையமாகக் கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

என்.எல்.சி. இந்தியா பொது மருத்துவமனையில், நமது நிறுவனமும், நெய்வேலி இரத்த தான சங்கமும் இணைந்து, குருதி தான முகாமை நடத்தின. அவ்வமயம், சுமார் 100 பேர், குருதி தானத்திற்கு, தங்கள் பெயரை பதிவு செய்தனர். Dr. P. ரவி, GS/NLCI GH முன்னிலையில், திரு S. ஸ்ரீதர், ED/TA, PR, CSR & Edn. இந்த முகாமினைத் துவக்கி வைத்தார்.

அன்று காலை, இரண்டாம் சுரங்கத்தில், மாபெரும் மரம் நடும் விழா நடைபெற்றது. அவ்வமயம், நிதித்துறை இயக்குனர், திரு ராக்கேஷ் குமார், சுரங்கத்துறை இயக்குனர், திரு சுபீர் தாஸ் மற்றும் திட்டம் மற்றும் செயலாக்கத்துறை இயக்குனர், திரு P. செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, மரக்கன்றுகளை நட்டனர். அப்போது, உயர் அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் சுமார் 1000 மரக்கன்றுகளை நட்டனர்.



ஒரு குழந்தைக்கு இனிப்பு வழங்கும் ED/TA

அன்றைய தினம், கடலூரில் உள்ள, அரசு சாரா தொண்டு நிறுவனமான, ஓயாசிஸ் இல்லத்திற்கு, திரு ஸ்ரீதர் மற்றும் திரு M. கார்த்திகேயன், GM/TA ஆகியோர் சென்று, அங்கிருந்த, 100 சிறப்புக் குழந்தைகள், 100 ஆதரவற்ற பெண்கள் மற்றும் முதியோருக்கு, உணவு மற்றும் இனிப்பு வழங்கினர்.



இரண்டாம் சுரங்கத்தில், மரக்கன்று நடும் நமது நிதித்துறை இயக்குனர்

இதுபோன்ற நலப்பணிகள் அனைத்தும், நமது நிறுவனத்தின், தூத்துக்குடி NTPL மின் நிலையம், ராஜஸ்தான் பர்சிங்சர் சுரங்கம் மற்றும் அனல்மின் நிலைய வளாகத்திலும் நடைபெற்றன.



முதியோருக்கு உணவு வழங்கும் GM/TA

ஆசிரியர்கள் தின விழா–2016



ஜவஹர் மேல்நிலைப் பள்ளி முதல்வருக்கு சான்றிதழ் வழங்கும் ED/TA

தலை சிறந்த ஆசிரியர், Dr. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான, செப்டம்பர், 5–ம் தேதியினை, ஆசிரியர் தினமாக, 1967ம் வருடத்திலிருந்து நாம் கொண்டாடி வருகிறோம். இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த Dr. ராதாகிருஷ்ணன், கல்வியில் ஈடுபாடு கொண்ட சிறந்த ராஜ தந்திரி. ஆசிரியப் பெருமக்கள் நமது சமூகத்திற்கு, செய்து வரும், பங்களிப்பினைப் பாராட்டும் வகையில், இவ்விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. நமது கல்வித்துறை, 08.09.2016 அன்று, லிக்னைட் அரங்கில், ஆசிரியர்கள் தின விழாவினைக் கொண்டாடியது. திரு S. ஸ்ரீதர், ED/TA,CSR,PR & Edn., இவ்விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ள, நெய்வேலி, பாரத ஸ்டேட் வங்கியின், AGM, திரு T. ஆதித்ய வர்மா அவர்கள், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.



SBI வங்கியின் AGM, ஒரு ஆசிரியருக்கு சான்றிதழ் வழங்குகிறார்

இவ்விழாவில், நெய்வேலியில் உள்ள நமது நிறுவனப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் முறையே, 12, மற்றும் 8 ஆசிரியர்களுக்கு, "என்.எல்.சி. இந்தியா நல்லாசிரியர் விருது" வழங்கப்பட்டது. மேலும், X மற்றும் XII வகுப்புகளுக்கான அரசுத் தேர்வில், 100% தேர்ச்சியினை அளித்த நமது நிறுவனப் பள்ளிகளில் பணியாற்றும் மொத்தம் 90 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். 2015–16ம் ஆண்டிற்கான, தமிழக அரசின் "Dr. ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது" பெற்ற, ஜவஹர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, துணை முதல்வர், திருமதி அனுசுயா தேவி அவர்கள் இவ்விழாவில், கௌரவிக்கப்பட்டார். நெய்வேலியில் உள்ள அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு, நெய்வேலி பாரத ஸ்டேட் வங்கி, நினைவுப் பரிசு, வழங்கியது. இவ்விழாவில், 300 ஆசிரியர்கள் அவர்களது குடும்பத்தினருடன், கலந்து கொண்டனர். இவ்விழாவில், மாணாக்கர்கள், ஆசிரியர்களுக்கு தங்களது நன்றியினைத் தெரிவித்தனர்.

தேசப் பிதாவிற்கு மரியாதை

நெய்வேலியில், 02.10.2016 அன்று, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியடிகளின், 147–வது பிறந்த தினம், நமது நிறுவனத்தால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வட்டம்–10, நகர நிர்வாக அலுவலக வளாகத்தில் உள்ள, மகாத்மாவின் திருஉருவச் சிலைக்கு, நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் மாலை அணிவிக்க, நெய்வேலி மகளிர் மன்றத்தினரின், "ராம்தன்" பக்திப் பாடலுடன், அன்றைய நிகழ்வுகள் துவங்கின.



மகாத்மாவின் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிறுவனத் தலைவர்

அதன்பின், "தூய்மை இந்தியா" திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, நமது நிறுவனத் தலைவர், இயக்குனர்கள், உயர் அதிகாரிகள், ஊழியர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், வட்டம்–19, முதன்மை அங்காடியில், காந்தியடிகளின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் தூய்மைப் பணியினை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, வட்டம்–20, கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், மகளிர் மன்ற உறுப்பினரால், காந்தியடிகள் மிகவும் விரும்பிய "வைஷ்ணவ ஜனதோ" என்றப் பாடலுடன், நிகழ்ச்சிகள் துவங்கின. பகவத் கீதை, பைபிள், குர்ஆன், திருக்குறள் மற்றும் நாலடியார் ஆகிய நூல்களிலிருந்து, ராமகிருஷ்ண சேவா சங்கம், இந்திய கிறிஸ்தவ கலாச்சார சங்கம், நெய்வேலி முஸ்லிம் ஜமாஅத் மற்றும் நெய்வேலி ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளால், சொற்றொடர்கள் வாசிக்கப்பட்டன. நெய்வேலி மகளிர் மன்றம், தெலுகு சமிதி, கேரள கலா சமிதி, கன்னட சங்கம், பாரதிய கலா சமிதி மற்றும் விப்ஸ் அமைப்பின், நெய்வேலி பிரிவு பக்திப் பாடல்களையும், கலை நிகழ்ச்சிகளையும் வழங்கி, தேசப் பிதாவிற்கு மரியாதை செலுத்தினர்.



தூய்மைப் பணியில் ஈடுபடும் நமது நிறுவனத் தலைவர்

விழாவில் உரையாற்றிய, Dr. ஆச்சார்யா அவர்கள், ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின், உரி பகுதியில் பயங்கரவாதிகளால், கொடூரமாகக் கொல்லப்பட்ட, 18 ராணுவ வீரர்களுக்கு புகழாரம் சூட்டினார்.

மகாத்மா காந்தியின், அஹிம்சை கொள்கையின் மீது நம்பிக்கை வைத்து, அமைதியை விரும்பும் நாடு, இந்தியா; ஆனால், சமாதானத்தை விரும்பும், ஒவ்வொரு மனிதனுக்கும், நமது தேசத்திற்கும் ஊறு விளைக்கும், பயங்கரவாதத்தை, அடியோடு களைந்தெறிவதில், எவருக்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்று கூறிய Dr. ஆச்சார்யா, நமது நலனிற்காகவும், தேச நலனுக்–காகவும், உலக நன்மைக்–காகவும், நாம் ஒவ்வொருவரும், காந்திஜியின் மதிப்பிற்குரிய கொள்கைகளைக் கடைபிடித்து, வாழ வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.



மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கு மாலை அணிவித்தபின்
நமது நிறுவனத் தலைவர், இயக்குனர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



புனித நூல்கள் வாசிக்கப்படுகிறது

மேலும் தனது உரையில், நாம் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், நமது குணம் மற்றும் நடத்தையிலும் தூய்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறியதுடன், வீடு, அலுவலகம் மற்றும் சுற்றுச் சூழல் ஆகியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்வதுடன், மனது, அணுகுமுறை மற்றும் செயல்களிலும் தூய்மை காணவேண்டும் என்றார். மேலும், பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியான, 'தூய்மை இல்லம்' என்ற திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார்.



கலை நிகழ்ச்சி

இந்நிகழ்ச்சியில், நமது இயக்குனர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ் மற்றும் திரு V. தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். என்.எல்.சி. இந்தியாப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு, நோட்டுப்புத்தகங்கள், பேனா, பென்சில், வரைபட உபகரணங்கள் மற்றும் இனிப்புகள் அடங்கிய பை, வழங்கப்பட்டன. இவற்றை, நெய்வேலி மகளிர் மன்றம் மற்றும் சினேகா பள்ளியின் தலைவி, திருமதி யோகமாயா ஆச்சார்யா, மகளிர் மன்றப் புரவலர்கள், திருமதி கஞ்சன் ராக்கேஷ் குமார் மற்றும் திருமதி சுதேஷ்ணா தாஸ் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில், நமது உயர் அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

அன்று மாலை, நெய்வேலி குழுக்கோயில்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகளால், கூட்டு வழிபாடு நடத்தப்பட்டது.



ஒரு மாணவிக்கு புத்தகப் பை வழங்கும்போது...

60–வது ஆண்டுப் பேரவைக் கூட்டம்



மேடையில் நிறுவனத் தலைவர், இயக்குனர்கள் மற்றும் நிறுவன செயலர்

நமது நிறுவனத்தின் 60–வது ஆண்டுப் பேரவைக் கூட்டம், 15.09.2016 அன்று, சென்னை, காமராஜ் அரங்கில், நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் தலைமை ஏற்று, 2015–16ம் ஆண்டிற்கான நமது உற்பத்தி மற்றும் நிதிநிலை செயல்பாடுகளை எடுத்துக்கூறினார். மேலும், நடப்பு நிதி ஆண்டின் (2016–17) செயல்பாடுகளையும், கட்டுமானத்தில் உள்ள மற்றும் எதிர்காலத் திட்டங்களின் நிலையினையும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நமது இயக்குனர்கள் குழு, 2015–16 ம் ஆண்டிற்கான, இறுதி பங்கு ஈவுத்தொகையாக, 12% (ஒரு பங்கிற்கு ரூ.1.20), அறிவித்தது. ஏற்கனவே இடைக்கால ஈவுத்தொகையாக, 18% (ஒரு பங்கிற்கு ரூ.1.80) வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், 2015–16ம் நிதி ஆண்டில், வழங்க விருக்கும் மொத்தப் பங்கு ஈவுத்தொகையான 30%, மற்றும் விநியோக வரிக்காக ரூ.604.82 கோடி செலவிடப்படும்.

இக்கூட்டத்தில் நமது இயக்குநர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன், திரு P. செல்வகுமார், அலுவல் சாரா, பகுதி நேர இயக்குநர் திரு ஆசாத் சிங் தூர், நமது நிறுவனச் செயலர், திரு K. விஸ்வநாத் ஆகியோர் பங்கேற்றனர். மத்திய அரசின் பிரதிநிதியாக, மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் சார்பு செயலர் (நிறுவன விவகாரங்கள்-II) திரு கிஷோர் குமார் பங்கேற்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பங்குதாரர்களின் ஐயங்களுக்கு, நிறுவனத் தலைவர் தெளிவான விளக்கங்களை வழங்கினார்.



பங்குதாரர்களிடையே உரையாடும் நிறுவனத் தலைவர்



பங்குதாரர்களில் ஒரு பகுதியினர்



கூட்டத்தில், விளக்கம் கோரும் ஒரு பங்குதாரர்

ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகள்

நமது நிறுவன செயல்முறைகளின், கண்காணிப்பு பிரிவு, (System Monitoring) வெவ்வேறு தொழிலக மற்றும் சேவைப் பகுதிகளுக்கான, ஆற்றல் சேமிப்பு குழுக்களின் கூட்டத்தை, 28.09.2016, அன்று நெய்வேலி, மத்திய தொழில்நுட்ப அலுவலகத்தில் நடத்தியது. இக்கூட்டத்திற்கு, திரு S. திருநாவுக்கரசு, ED (CP&PM) அவர்கள் தலைமை வகித்தார்.

அவ்வமயம், திரு B. மணிவண்ணன், GM/ System Monitoring, நமது நிறுவனத்தில், மேற்கொள்ளப்பட்டுவரும், ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகள் குறித்து, கணினி மூலம் எடுத்துக் கூறினார். தலைமை உரையாற்றிய, செயல் இயக்குனர், தேசிய அளவில், ஆற்றல் சேமிப்பு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் எடுத்து கூறியதுடன், நாட்டின் ஒட்டு மொத்த தேசிய உற்பத்தி அளவீட்டிற்கு, அது முக்கியக் காரணியாக அமைந்துள்ளதையும் விளக்கினார். ஒரு யூனிட் மின்சார சேமிப்பு என்பது 2 முதல் 2.5 யூனிட் மின் உற்பத்தி செய்வதற்கு சமமானது, என்ற அவர், மின்சாரம் எடுத்து செல்லல் மற்றும் வினியோகத்தில் ஏற்படும் இழப்பீட்டினை, நவீனத் தொழில்நுட்பங்கள் மூலம் குறைக்க வேண்டும் என்றுக் கூறினார். வருங்காலத்தில், படிம எரிபொருள்களை படிப்படியாகக் குறைத்து, முற்றிலுமாக நீக்கியபின், உலக அளவில், பல்வேறு சுற்றுசூழல் மற்றும் நீடித்த வளர்ச்சி குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட வழிவகுக்கும் என்றார்.



ஆற்றல் சேமிப்பு குறித்த கூட்டத்தில், திரு S. திருநாவுக்கரசு உரையாற்றுகிறார்

இக்கூட்டத்தில், 52 அதிகாரிகள் கலந்து கொண்டனர். முன்னதாக, அனைவரையும் திரு மணிவண்ணன் வரவேற்க திரு ரவி சங்கர் செளரி, CM/System Monitoring நன்றி கூறினார்.

ஹிந்தி அரைத்திங்கள் விழா கொண்டாட்டங்கள்

ஆட்சி மொழியான ஹிந்தி மொழியினைக் குறித்து, நமது நிறுவனத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 14.09.2016 முதல் 28.09.2016 வரை ஹிந்தி அரைத்திங்கள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



ஹிந்தி அரைத்திங்கள் விழாவினைத் தொடங்கி வைக்கும் ED/HR

நெய்வேலி, கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், 28.09.2016 அன்று நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சியில், தலைமை விருந்தினராக நமது நிறுவனத் தலைவர் Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் கலந்து கொண்டார். அப்போது, உரையாற்றிய அவர், "ஹிந்தி மொழி, நம் தேசத்தில் உள்ள அனைவரையும் ஒன்றிணைக்கும் சிறந்த தகவல் பரிமாற்ற ஊடகமாக செயல்படுகிறது" என்றார். மேலும், நமது நிறுவனம், 7 மாநிலங்களில், தனது திட்டங்களை அமைக்கவிருப்பதால், ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ளுதல், ஒவ்வொரு ஊழியருக்கும் அத்தியாவசியமானது என்றார்.

இந்நிகழ்ச்சியில், இயக்குநர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு, சிறப்பித்தனர்.

இருவார கால விழா தொடர்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்–பட்டன. பரிசு வென்றவர்களுக்கு ஹிந்தி மொழியில் மேடையில் பேசுவதற்கு வழங்கப்பட்ட வாய்ப்பு, அனைவரையும், ஊக்கப்படுத்துவதாக அமைந்தது.



நிறைவு விழாவில், பங்கேற்ற நிறுவனத்தலைவர் மற்றும் இயக்குநர்கள்

உயர் அதிகாரிகள், ஹிந்தி பிரிவு ஊழியர்கள், தென்னிந்திய ஹிந்தி பிரச்சார சபையின் ஆசிரியர்கள், ஊழியர்கள் இந்நிகழ்ச்சியில், கலந்து கொண்டனர்.

58–வது ஆட்சிமொழி அமலாக்கக் குழு கூட்டம்



58–வது ஆட்சிமொழி அமலாக்கக் குழுக் கூட்டம், நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் தலைமையில், 26.09.2016 அன்று, நெய்வேலி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. ஜூலை–செப்டம்பர் 2016 காலாண்டில், நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆட்சிமொழி அமலாக்கம் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதன் பொறுப்பாளர்கள் மற்றும் மனிதவளத்துறை அதிகாரிகளிடம், கேட்டறிந்து, அது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இயக்குனர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர்தாஸ், திரு P. செல்வகுமார் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

மண்டல அலுவலகத்தில், நடைபெற்ற ஆட்சி மொழி அமலாக்க நடவடிக்கைகள்

ஹிந்தி அரைத்திங்கள் விழா

சென்னை மண்டல அலுவலகத்தில், அனுசரிக்கப்பட்ட ஹிந்தி அரைத்திங்கள் விழாவின் நிறைவு நிகழ்ச்சி, 30.09.2016 அன்று நடைபெற்றது. சென்னை, தென்னிந்திய ஹிந்தி பிரச்சார சபையின், முன்னாள், பதிவாளர், Dr. நிர்மலா S. மௌரியா, தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ள, இவ்விழாவினை முன்னிட்டு நடைபெற்றப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, சென்னை, லயோலா கல்லூரி ஹிந்தி துறையில் முன்னாள் பேராசிரியர் திரு L.V.K. ஸ்ரீதரன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



சென்னை, மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற ஹிந்தி அரைத்திங்கள் விழா

ஹிந்தி பயிலரங்கு

சென்னை, மண்டல அலுவலகத்தில், "ஆட்சி மொழி சட்டம்–1963 மற்றும் விதிமுறைகள் 1976, ஆண்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கை, கணினியில் ஹிந்தி மொழி உபயோகம்" என்றத் தலைப்பில், ஹிந்தி பயிலரங்கு, 03.08.2016 அன்று நடத்தப்பட்டது. திரு L.V.K. ஸ்ரீதரன் பயிற்றுனராகப் பங்கேற்ற இப்பயிலரங்கில், 32 ஊழியர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

ஆட்சிமொழி அமலாக்கம் குறித்த ஆய்வு

ஆட்சிமொழி அமலாக்கம் குறித்த ஆய்வினை, திரு P. சத்தியமூர்த்தி, DGM/HR, மற்றும் ஹிந்தி அலுவலர் 03.08.2016 அன்று, நமது சென்னை மண்டல அலுவலகத்தில் மேற்கொண்டனர். ஆட்சிமொழி சட்டம் 1963 பிரிவு 3(3)னை 100 சதவிகிதம் அமல்படுத்துவதற்கான ஆலோசனைகளை அப்போது இக்குழு நமது அதிகாரிகளுக்கு வழங்கியது.

நமது பொது மருத்துவமனையில் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினருக்கு உளவியல் ரீதியாக வழிகாட்டும் சிறப்பு மையம்

நமது பொது மருத்துவமனை வளாகத்தில், குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினருக்கு உளவியல் ரீதியாக வழிகாட்டும் வகையில், ஒரு சிகிச்சைப் பிரிவினை, 14.07.2016 அன்று, Dr. K. ஜனார்தன், CGS/NLCI GH, குத்துவிளக்கேற்றித் துவக்கி வைத்தார்.

இந்த சிறப்பான முயற்சியின் மூலம், நமது பொது மருத்துவமனையானது, குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரிடம் காணப்படும் பல்வேறு மனநிலை மாற்றங்கள், கற்றல் குறைபாடு, நரம்பியல் மாற்றங்கள், உணர்ச்சித் தாக்கங்கள், உளவியல் மற்றும் சமூகம் சார்ந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆலோசனை வழங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.


குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை மையத்தினை தொடங்கி வைக்கும் **Dr. K. ஜனார்தன்**

இம்மையத்தில், மனநல மருத்துவர், உளவியல் ஆலோசகர், தொழில்சார்பு சிகிச்சையாளர், பேச்சு பயிற்சியாளர் மற்றும் மனவள ஆலோசகர்கள் குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுவர். இந்த மையம், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில், மாலை 2 மணி முதல் 4 மணி வரை செயல்படும்.

தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றால், குழந்தைகள், குறிப்பாக வளர் இளம் பருவத்தினர் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இம்மையத்தில், கற்றல் குறைபாடு மற்றும் மனம் சார்ந்த இதர குறைபாடுகள், மருத்துவ ரீதியாக, தொடக்க நிலையிலேயேக் கண்டறியப்பட்டு, தீர்வுக்கான ஆலோசனைகள் வழங்கப்படவிருக்கிறது. இம்மையத்தில், நமது மனநல மருத்துவர், Dr. S. விஜயகுமாரி, குழந்தைநல மருத்துவர், திருமதி V.T. விமலா, பேச்சுப் பயிற்சியாளர் திருமதி N. பத்மா ஆகியோருடன், நெய்வேலி நகரியத்தில் வசித்து வரும் உளவியல் நிபுணர்களும் தாமகவே முன்வந்து சேவை புரிய உள்ளனர்.

மேலும், என்.எல்.சி. ஊழியர்களின் துணைவியர்களான, உளவியல் நிபுணர் – திருமதி நர்மதா, தொழில்சார் சிகிச்சையாளர்கள் – திருமதி மாலதி, திருமதி நளினி அஷோக் மற்றும் உளவியல் ஆலோசகர்கள் – திருமதி மேரி ஜெயமணி, திருமதி சகிலா மற்றும் திருமதி பவானி ஆகியோர் தன்னார்வலர்களாக செயல்பட உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், நமது பொது மருத்துவமனையின் பொது கண்காணிப்பாளர்கள், Dr. P. ரவி, Dr. V. நாகராஜு மற்றும் மருத்துவர்கள் – Dr. M. சாந்தலட்சுமி, Dr. அருள்மொழி, Dr. பாக்கியமேரி ஜெரோம், இதர மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வாழ்க்கை முடிந்த பின்னரும் வாழ முடியும்

உறுப்பு தானத்தைத் தொடங்கி வைத்து, அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்த நமது நிறுவனத் தலைவர்

நாட்டின் 70–வது சுதந்திரதினத்தை முன்னிட்டு, நமது பொது மருத்துவமனையில், நிறுவனத் தலைவர் Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் 15.08.2016 அன்று, ‘‘உறுப்பு தானம் மற்றும் இரத்த தான முகாமினை’’, நமது நிறுவன முன்னாள் தலைவர், திரு A.R. அன்சாரி மற்றும் இயக்குனர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன், திரு P. செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார். தொடங்கி வைத்ததுடன் நில்லாது, உறுப்பு தானம் செய்ய தனது பெயரை திரு ஆச்சார்யா பதிவு செய்து, அனைவருக்கும் முன் மாதிரியாகவும் திகழ்ந்தார். அவரைத் தொடர்ந்து, திரு அன்சாரி மற்றும் இயக்குனர்கள், இந்த சிறப்பான செயலுக்குத் தங்கள் பெயரையும் பதிவு செய்தனர். நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குனர்கள் செயலால் ஈர்க்கப்பட்டு, ஏராளமான நமது ஊழியர்கள், இந்த நல்ல நோக்கத்திற்காக தமது பெயரையும் பதிவு செய்தனர்.



உறுப்பு தானத்திற்கு, தனது பெயரைப் பதிவு செய்யும், நமது நிறுவனத்தலைவர்

நாம் எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல.. எந்த அளவு பிறருக்கு பயனுள்ள வகையில் வாழ்கிறோம் என்பது தான் முக்கியம் என்றக் கருத்தினால் உந்தப்பட்டு, அனைவரும் உறுப்பு தானத்திற்கு விருப்பம் தெரிவித்தனர். மேலும், இந்த நற்செயலின் மூலம், நமது வாழ்க்கை முடிந்தபின்னரும், பிறர் மூலம், வாழ்ந்து பலரையும் மகிழ்ச்சிபடுத்த முடியும் என்ற நோக்கம் நமது ஊழியர்களை, உறுப்புதானம் செய்யத் தூண்டியது. ஒருவரின் இறப்பிற்கு பின் தனது சிறுநீரகம், இதயம், ஈரல், கணையம், குடல், நுரையீரல், எலும்பு, எலும்பு மஜ்ஜை, கால்பகுதி போன்றவற்றைத் தானம் செய்வதன் மூலம் 10 பேருக்கு மறுவாழ்வு வழங்கலாம்.

சமூகப் பொறுப்புணர்வுப் பணிகளில் முன்னோடியாகத் திகழும் நம் நிறுவனம், இச்செயலின் மூலம் நமது ஊழியர்களையும், சமூகப் பணியில் ஈடுபட ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்நிகழ்ச்சியில், நமது பொது மருத்துவமனையின் மூத்த மருத்துவர்கள், Dr. P. ரவி, (GS), Dr. V. நாகராஜு (GS), Dr. R. அருள்மொழி, Dr. பாக்கியமேரி ஜெரோம், இதர மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, இரண்டாம் சுரங்கம் (27.08.2016), முதல் சுரங்கம் (30.08.2016), சுரங்கம் 1–A (22.09.2016) ஆகிய பகுதிகளில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், 17.09.2016 அன்று நமது பொது மருத்துவமனையில் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. மாணவ சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நமது பொது மருத்துவமனை 12.09.2016 அன்று ஜவகர் அறிவியல் கல்லூரியில், ஒரு இரத்த மற்றும் உறுப்பு தான முகாமினை நடத்தியது.

உறுப்பு தானத்தை, உயிரோடு இருப்பவர்களும், விபத்தால் பாதிக்கப்பட்ட மூளை சாவு அடைந்தவர்களும் செய்யலாம். ஒருவரிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட உறுப்புகள் மற்றொருவரின் உயிரைப் பாதுகாத்து, அக்குடும்பத்தில் மகிழ்ச்சியை உருவாக்குகிறது.

6 கண்காட்சிகளில் பங்கேற்ற நமது நிறுவனம்

6–வது நிலக்கரி கண்காட்சி–புது டில்லி

புது டில்லி, பிரகதி மைதானத்தில் 05.09.2016, முதல் 07.09.2016 வரை, டாப்கான் நிறுவனம், ஏற்பாடு செய்திருந்த 6–வது நிலக்கரி கண்காட்சியில் நமது நிறுவனம் பங்கேற்றது. நமது அரங்கில், சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையங்களில், சுற்றுச்சூழல் பராமரிப்புத் தொடர்பாக, நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகள், சமூகப் பொறுப்புணர்வுப் பணிகள், உற்பத்தி மற்றும் நிதி நிலை செயல்பாடுகள் தொடர்பான பெரிய அளவிலான நிழற்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. நமது அரங்கின் வடிவமைப்புக்காக, வழங்கப்பட்ட சிறப்புப் பரிசினை, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலர், திரு நாராயன் ஜா, IAS வழங்க, திரு T. நாதமுனி, DGM/PR பெற்றுக் கொண்டார்.



நமது அரங்கில் விருந்தினரைக் கௌரவிக்கும் DGM/PR

தேசிய மின்சக்தி கருத்தரங்கில் நடைபெற்ற கண்காட்சி–நெய்வேலி

நமது நிறுவனம், கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், 09.09.2016 மற்றும் 10.09.2016 அன்று நடத்திய தேசிய மின்சக்தி கருத்தரங்கினை முன்னிட்டு, ஒரு கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நமது சுரங்கம் மற்றும் மின் உற்பத்திப் பணிகள் தொடர்பான, புகைப்படங்கள் மற்றும் இயங்கும் மாதிரிகள் நமது அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் சிறப்பு செயலர், Dr. A.K. துபே இக்கண்காட்சியைத் துவங்கி வைத்தார். இக்கண்காட்சியில், BHEL, ABB, போன்ற முன்னணி பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பொருட்களை பார்வைக்கு வைத்திருந்ததுடன் கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்கு அதுகுறித்து விளக்கிக் கூறினர்.

மாநிலப் பாதுகாப்பு வார விழா கண்காட்சி–தளவாய்

தமிழ்நாடு சுரங்கப் பாதுகாப்பு சங்கம், அரியலூர் மாவட்டம், தளவாய் பகுதியில் அமைந்துள்ள, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில், 11.09.2016 அன்று ஏற்பாடு செய்திருந்த, இவ்வாண்டிற்கான, மாநில அளவிலான பாதுகாப்பு விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த, கண்காட்சியில் நமது நிறுவனம் பங்கேற்றது. நமது அரங்கில், நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை, சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையங்களில் பாதுகாப்பு குறித்து நாம் எடுத்துவரும் முயற்சிகள், போன்றவை, நிழற்படங்கள் மற்றும் ஒலி, ஒளி அமைப்பின் மூலம், அறிவிக்கப்பட்டது. இந்திய சுரங்கப் பாதுகாப்பு இயக்ககத்தின் உயர் அதிகாரிகள், சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களின் அதிகாரிகள், நமது அரங்கினைப் பார்வையிட்டு, நமது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பாராட்டினர்.



மின்சக்தி கருத்தரங்கு கண்காட்சியில், Dr. A.K. துபே

சுவிட்ச் குளோபல் கண்காட்சி–2016, வதோதரா

குஜராத் மாநிலம், வதோதராவில் 06.10.2016 முதல் 10.10.2016 வரை, நடைபெற்ற சர்வதேச கண்காட்சியான "சுவிட்ச் குளோபல் எக்ஸ்போ–2016" மற்றும் மின் பொறியியல், மின் உற்பத்தி மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிதல் குறித்த உச்சி மாநாட்டில், நமது நிறுவனம் பங்கேற்றது. இக்கண்காட்சியை, மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு), திரு பியூஷ் கோயல், துவக்கி வைத்தார்.

நமது அரங்கில், சுரங்கங்கள் மற்றும் அனல்மின் நிலையங்களின் பெரிதாக்கப்பட்ட நிழற்படங்கள், பார்வைக்கு வைக்கப்பட்டன. மேலும், நமது நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த குறும்படம் திரையிடப்பட்டது. "சூரிய ஒளி மற்றும் காற்றாலை மூலம் மின்சக்தி உற்பத்தி செய்தல்" என்பதை மையக்கருத்தாகக் கொண்டு, இக்கண்காட்சி நடத்தப்பட்டது. 30 நாடுகளிலிருந்து பங்கேற்ற, 65 நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 350 அதிகாரிகள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.



மும்பை MET கண்காட்சியில், நமது அரங்கு

'மெட்' சர்வதேச கண்காட்சி–மும்பை

மும்பையில், 12.10.2016 முதல் 19.10.2016 வரை நடைபெற்ற, "பொருட்கள்–பொறியியல்–தொழில்நுட்பம்" குறித்த, சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டில், என்.எல்.சி. இந்தியா நிறுவனம் கலந்துகொண்டது.

இக்கண்காட்சியினை, மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர், திரு மனோகர் பாரிக்கர் அவர்கள், 12.10.2016 அன்று தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டினை, புதுடில்லியைச் சார்ந்த டாஃப்கான் மற்றும் ASM International நிறுவனத்தின் இந்திய கிளை ஆகியவை இணைந்து "வளர்ந்து வரும் நவீன உலகத்திற்கு, தாரக மந்திரமாகத் திகழும் பகிர்வு மற்றும் லாபம்," என்ற மையக்கருத்தின் அடிப்படையில், நடத்தின.

நமது அரங்கில், சுரங்கங்கள், அனல்மின் நிலையங்கள், சுற்றுச்சூழல், சமூகப் பொறுப்புணர்வு செயல்பாடுகள், தற்போதைய உற்பத்தி மற்றும் நிதித்துறை செயல்பாடுகள் குறித்து பெரிய அளவிலான நிழற்படங்கள், பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.



கதாம்பூர் கண்காட்சி அரங்கில், பத்திரிகையாளர்களிடையே உரையாடும் மாண்புமிகு அமைச்சர்

NUPPL கண்காட்சி, கதாம்பூர்

கதாம்பூர் அனல்மின் நிலையக் கட்டுமானப் பணிகளின் துவக்க விழா நடைபெற்ற 20.10.2016 அன்று, NUPPL திட்ட வளாகத்தில், ஒரு கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. நமது அரங்கில், சுரங்கங்கள், அனல்மின் நிலையங்கள் மற்றும் நமது சமூகப் பொறுப்புணர்வு செயல்பாடுகள் குறித்து, நிழற்படங்கள், பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு), திரு பியூஷ் கோயல், Dr. முரளி மனோகர் ஜோஷி, MP மற்றும் முக்கியப் பிரமுகர்கள் இக்கண்காட்சியினைப் பார்வையிட்டனர்.

மண்டல அளவிலான சுரங்கப் பாதுகாப்பு வாரக் கொண்டாட்டங்கள்–2016

"விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் அளிக்கும் பாதுகாப்பைவிட, ஒருவரது அணுகுமுறையும், கவனமுமே பாதுகாப்பினை உறுதி செய்யும்." இதுதான், நெய்வேலி லிக்னைட் அரங்கில், 21.08.2016 அன்று நடைபெற்ற நெய்வேலி மண்டல அளவிலான, சுரங்கப் பாதுகாப்பு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட, சென்னை மண்டல சுரங்கப் பாதுகாப்புத் துணை இயக்குநர், திரு ஷியாம் மிஸ்ரா அவர்கள், வழங்கிய உரையின் முக்கிய கருத்து.



மண்டல பாதுகாப்பு வார விழாவின் நிறைவு நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்கும் திரு ஷியாம் மிஸ்ரா

நமது நிறுவனம், தமிழ்நாடு சுரங்கப் பாதுகாப்பு சங்கத்துடன் இணைந்து, நெய்வேலி மண்டல அளவிலான, சுரங்கப் பாதுகாப்பு வாரத்தினை, 15.08.2016 முதல் 21.08.2016 வரை, சுரங்கங்களுக்கான குழுப்பயிற்சி மையத்தில் நடத்தியது. பணிபுரியும் இடத்தில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான, மாதிரி உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை வழிமுறைகள், நமது நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளால் அமைக்கப்பட்ட அரங்கில், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

நமது நிறுவனத்தின் மூன்று சுரங்கங்களை உள்ளடக்கிய, நெய்வேலி மண்டலத்தின், சுரங்கப் பாதுகாப்பு வார விழா நிறைவு நாள் நிகழ்ச்சி, லிக்னைட் அரங்கில், 21.08.2016 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், சென்னை மண்டலத்தின், சுரங்கப் பாதுகாப்பு துணை இயக்குநர் திரு ஷியாம் மிஸ்ரா கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ள, திரு S.A.F. காலித், ED/Mines தலைமை தாங்கினார்.

நெய்வேலி சுரங்கங்களின் செயல்பாட்டை வெகுவாகப் பாராட்டிய, திரு மிஸ்ரா அவர்கள், நிறுவனத்தின் வளர்ச்சிக்கு, ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதை புகழ்ந்துரைத்தார். வேலை செய்யும் இடத்தில், அவசர தேவை தவிர்த்து, மற்ற நேரத்தில், கைபேசி உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற அவர், இந்த அலட்சியப் போக்கு, பல நேரங்களில், விபத்துகளை ஏற்படுத்தக் காரணமாகிறது என்றார்.

திரு காலித் அவர்கள், தனது தலைமை உரையில், பெரும்பாலான விபத்துகளுக்கு, மனிதத் தவறுகளே காரணம் என்று கூறியதுடன், நமது நிறுவனத்தில், "ஒருங்கிணைக்கப்பட்ட ஆபத்து மேலாண்மை அமைப்பு" தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்; மேலும், ஐ.ஐ.டி., தன்பாத், பேராசிரியர், திரு R.M. பட்டாச்சார்யா, அவர்கள் சுரங்கங்களில் பாதுகாப்பினை மேம்படுத்தப் பரிந்துரைத்த நடைமுறைகளை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு சுரங்கப் பாதுகாப்பு சங்கத்தின் செயலர், திரு P. ராமசாமி அவர்கள், அச்சங்கம் மேற்கொண்டுவரும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

பாதுகாப்பு குறித்து நடத்தப்பட்ட, கட்டுரை, பேச்சு மற்றும் சொற்றொடர் அமைக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. புதிய முறையினை அறிமுகப்படுத்தியதற்காக, இரண்டாம் சுரங்கத்தின் கன்வேயர் மற்றும் மின்துறைக்கு, சுரங்க ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. பாதுகாப்பு வார தினங்களில், ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக, நமது பொது மருத்துவமனைக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. இவ்விழாவில், திரு M. ராஜசேகரன், CGM/Mine-II, திரு மோகன் ரெட்டி, CGM/ISO, திரு ஹேமந்த் குமார், GM/Mine-I, திரு P.A. செந்தில் குமார், GM/Safety ஆகியோர் உரையாற்றினர். சுரங்கங்களில் கடைபிடிக்கப்பட்டு வரும் பாதுகாப்பு குறித்து, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர், திரு C. சுகுமார், சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தின் பொருளாளர், திரு M. ஸ்ரீனிவாசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பாதுகாப்பு நடைமுறைகளை வலியுறுத்தி, நமது ஊழியர்களால், மேடையேற்றப் பெற்ற நாடகம், அனைவரது பாராட்டினையும் பெற்றது. முன்னதாக, திரு V. ரங்கநாதன், ED/SME & Conveyor அவர்கள் வரவேற்புரை வழங்க, திரு அரவிந்த் குமார், CGM/Mine-IA அவர்கள் நன்றியுரை வழங்கினார்.



பாதுகாப்புக் கண்காட்சியில் ஒரு இயங்கும் மாதிரியை, திரு மிஸ்ரா பார்வையிடுகிறார்

இவ்வாண்டு, நடைபெற்ற 56–வது சுரங்கப் பாதுகாப்பு வார விழா 08.08.2016 அன்று தொடங்கப்பட்டு, தமிழகத்தின் 5 மண்டலங்களான, சென்னை, நெய்வேலி, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாநில அளவிலான சுரங்கப் பாதுகாப்பு வார விழாவின் நிறைவு நிகழ்ச்சி, அரியலூர் மாவட்டம், தளவாயில் 11.09.2016 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், மத்திய சுரங்கப் பாதுகாப்பு இயக்ககத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



நமது செயல் இயக்குநர்கள் திரு S.A.F. காலித், திரு V. ரங்கநாதன் மற்றும் சுரங்கத்துறை உயர் அதிகாரிகளுடன் திரு மிஸ்ரா

பாதுகாப்பு குறித்த பயிற்சி

முதல் அனல்மின் நிலையத்தில்

ஒப்பந்தத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில், பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, முதல் அனல்மின் நிலையத்தில், 25.08.2016 அன்று நடைபெற்றது. தமிழக அரசின் தொழிலகப் பாதுகாப்புத் துறை, கடலூர் மண்டல, இணை இயக்குநர் திரு R. ராஜசேகரன் அவர்கள் இப்பயிற்சியை நடத்தினார். அப்போது உரையாற்றிய அவர், நிர்வாகம், உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஒன்றிணைந்து பாதுகாப்பான வகையில் வேலை செய்யும் சூழ்நிலை மற்றும் நேர்மறையான பாதுகாப்பு கலாச்சாரம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும் என்று கூறினார்.

இப்பயிற்சியை திரு N.சபாபதி (GM/TPS-I) தொடங்கி வைத்தார். வெவ்வேறு பிரிவுகளின் பொது மேலாளர்கள், திரு S. குமார், திரு M. சேரன், திரு R. வேலாயுதம், துறைத் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

இரண்டாம் அனல்மின் நிலைய விரிவாக்கத்தில்

திரு M.V. வரதராஜன் (GM/TPS-II Expn.), தொழிலாளர்களுக்கான பாதுகாப்புப் பயிற்சி வகுப்பினை, 30.08.2016 அன்று தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையின், இணை இயக்குனர் திரு R. ராஜசேகரன் அவர்கள் முன்னிலையில், துவக்கி வைத்தார். ஒவ்வொரு ஊழியரும் பாதுகாப்பு சாதனங்கள் அணிந்து வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன், பாதுகாப்பற்ற சூழ்நிலை மற்றும் நடைமுறைகள் குறித்து திரு ராஜசேகரன், தனது உரையில், விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அத்தகைய சூழ்நிலையை எவ்வாறு கையாளவேண்டும் என்று கணினி உதவியுடன் விளக்கமளித்தார். வெவ்வேறு பிரிவுகளின் பொது மேலாளர்கள் திரு A.S.வைத்தியநாதன், திரு A. ரவீந்திரன் மற்றும் உயர் அதிகாரிகள் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

இப்பயிற்சிகளில் நமது மருத்துவமனையின் CMO, Dr.ஜெய மோகன் தாஸ், தொழிலகத் தூய்மை மற்றும் தொழில் சார்ந்த நோய்கள் குறித்து உரையாற்றினார். இப்பயிலரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு பாதுகாப்பு குறித்த வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.



முதல் அனல்மின் நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சியில் நமது அதிகாரிகளுடன் திரு R. ராஜசேகரன்



இரண்டாம் அனல்மின் நிலைய விரிவாக்கத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சியில் நமது அதிகாரிகளுடன் திரு R. ராஜசேகரன்

கண்ணீர் அஞ்சலி

2016–ம் ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரை, 19 பணியாளர்கள் தங்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்தியுள்ளனர்.
இயற்கை எய்திய ஊழியர்களுக்கு மின்மலர் தனது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன்,
அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
✦ பி.நா. பிறந்த நாள் ● ப.நா. பணியேற்ற நாள் ■ இ.நா. இயற்கை எய்திய நாள்

சுரங்கம் - I

S. அப்ரகாம், CPF No.25746, Chief Technician./Bottom Bench
✦ பி.நா.:04.06.1959; I ● ப.நா.:01.12.1981; ■ இ.நா.:05.07.2016

N. ஜெயராஜ், CPF No.44990, Service Worker - Grade I /Top Bench
பி.நா.:01.06.1966; ப.நா.:27.01.2006; இ.நா.:24.07.2016

K. சுஜாதா, CPF No.36356, Supervisor FC&D Gr. II./HR
பி.நா.:22.05.1971; ப.நா.:01.08.1992; இ.நா.:24.07.2016

I. சவரிமுத்து, CPF No. 38774, Tech G.I (A)/Crawler Yard
பி.நா.:01.03.1965; ப.நா.:01.05.1993; இ.நா.:28.08.2016

R. அருள் பிரகாசம், CPF No.39209, Chief Technician./S.M.E./MM
பி.நா.:04.06.1965; ப.நா.:14.06.1993; இ.நா.:30.08.2016

J. வில்லியம்ஸ், CPF No. 42617, Tech. G. III (C)/SME/Lubrication
பி.நா.:11.01.1965; ப.நா.:01.10.1998; இ.நா.:16.09.2016

அனல் மின் நிலையம்-I

G. சந்திரசேகரன், CPF No.44984, Service Wr (G) Gr III/FHS (O)
பி.நா.:01.07.1958; ப.நா.:27.01.2006; இ.நா.:02.07.2016

T. சாவித்ரி, CPF No.34327, Att. Spl. Gr. A/Accts. Centre
பி.நா.:03.05.1964; ப.நா.:26.06.1989; இ.நா.:19.07.2016

L. லோகநாதன், CPF No.43428, Tech Gr.III (C)./FHS (O)
பி.நா.:27.05.1970; ப.நா.:14.08.2000; இ.நா.:10.09.2016

அனல் மின் நிலையம்-I விரிவாக்கம்

S. ரகு, CPF No.23116, Asst. Personnel Officer(SG3)./HR
பி.நா.:01.06.1957; ப.நா.:30.11.1978; இ.நா.:15.08.2016

பொருள் மேலாண்மைத் துறை

J. முகமத் ஜலாலுதீன் அக்பர், CPF No.30068, JR Officer(Administration)./HR
பி.நா.:29.09.1961; ப.நா.:18.03.1986; இ.நா.:02.07.2016

அனல் மின் நிலையம்-II

R. வைத்தியநாதன், CPF No. 44350, Service Worker G. III (G)/ Elec. (O&OS)
பி.நா.:04.05.1957; ப.நா.:18.07.2003; இ.நா.:09.09.2016

சுரங்கம்-II

V. S. மோகனன், CPF No.43721, Tech Gr.III (C)./HR
பி.நா.:08.05.1965;ப.நா.:01.03.2001; இ.நா.:11.07.2016

V. பாபு, CPF No.40552, Sr. Tech Gr. I./Electrical Mines
பி.நா.:16.03.1969;ப.நா.:26.04.1996; இ.நா.:26.07.2016

C. ராஜேஸ்வரி, CPF No.33037, Assistant Personnel Officer(SG3)/HR
பி.நா.:26.11.1960;ப.நா.:16.12.1987; இ.நா.:29.07.2016

A. ராஜேந்திரன், CPF No.28715, Sr. Foreman./S.M.E./Reconditioning
பி.நா.:09.05.1961;ப.நா.:01.11.1986; இ.நா.:02.08.2016

K. முருகன், CPF No.44480, Service Worker Gr III/Bottom Bench
பி.நா.:09.04.1971;ப.நா.:01.02.2004; இ.நா.:02.08.2016

C. ராமலிங்கம், CPF No.33821, Tech.Gr.II (B)./Surplus Cell
பி.நா.:05.02.1961;ப.நா.:01.12.1989; இ.நா.:12.08.2016

அனல் மின் நிலையம்-II விரிவாக்கம்

V. பொன்னுசாமி, CPF No. 25916, DGM/Mech./BTG Operation
பி.நா.:30.05.1959; ப.நா.:26.04.1982; இ.நா.:30.07.2016

இயற்கை எய்திய ஊழியர்களின் ஆன்மா சாந்தியடையட்டும்

தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் மத்திய அரசுடன் கைகோர்க்கும் நமது நிறுவனம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டு மையம் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்து

நமது நிறுவனம், 1927–ம் ஆண்டு தொடங்கப்பட்ட, 89 ஆண்டுகள் பழமையான புகழ்பெற்ற, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலையுடன் இணைந்து ஒரு திறன் மேம்பாட்டு மையம் அமைக்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. நமது நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களின் வாரிசுகள், தங்கள் அறிவு மற்றும் பணித்திறனை மேம்படுத்தும் வகையில், நமது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Skill India
कौशल भारत - कुशल भारत


மாண்புமிகு மத்திய அமைச்சர், நமது CMD மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் VC முன்னிலையில் ஒப்பந்தத்தினைப் பரிமாறிக்கொள்ளும் திரு S. ஸ்ரீதர் மற்றும் Dr. K. ஆறுமுகம்

லிக்னைட் அரங்கில், 04.10.2016 அன்று, மாண்புமிகு மத்திய மின்சக்தி, நிலக்கரி, நவீன & புதுப்பிக்கவல்ல ஆற்றல் மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு), திரு பியூஷ் கோயல் அவர்கள், நமது நிறுவனத் தலைவர், Dr. சரத் குமார் ஆச்சார்யா, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், Dr. S. மணியன் ஆகியோர் முன்னிலையில், திரு S. ஸ்ரீதர், ED/CSR, TA, EDN. & PR மற்றும் பல்கலையின் பதிவாளர் Dr. K. ஆறுமுகம் ஆகியோர் இதற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில், நமது இயக்குநர்கள், திரு ராக்கேஷ் குமார், திரு சுபீர் தாஸ் மற்றும் திரு V. தங்கபாண்டியன் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில், மத்திய அரசின், முக்கியத் திட்டமான, திறன் மிகு இந்தியா இயக்கத்தில், இணைந்தமைக்காக, மாண்புமிகு மத்திய அமைச்சர், நமது நிறுவனத்தையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும் பாராட்டினார்.

முதற்கட்டமாக, நடப்பு கல்வி ஆண்டிலிருந்து (2016–17), இந்த மையத்தின் மூலம், சுரங்கப் பொறியியல் துறையில், மூன்றாண்டு பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. அடுத்தக்கட்டமாக, இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பயன் பெறும் வகையில், வேலை வாய்ப்பு வழங்கும் பட்டயப் படிப்புகள், வெல்டிங், குளிர்சாதன இயந்திரத்தின் பழுது நீக்கம், அச்சுத்துறை, போன்ற பல்வேறு துறைகளில், குறுகிய கால படிப்புகள், தொடங்கப்பட விருக்கின்றன.

இது தொடர்பான, கட்டமைப்பு வசதிகளை அமைக்க, நமது நிறுவனம், பல்கலைக்கழகத்திற்கு, ரூ.3.50 கோடி வழங்கவிருக்கிறது. சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், 2015–16ம் ஆண்டில் மட்டும், நமது நிறுவனம், ரூ.82 கோடியை செலவிட்டுள்ளது. இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புப் பயிற்சி வழங்கும், 'ஜீவிகா' திட்டத்தின் மூலம், நிறுவனத்திற்கு நிலம் வழங்கிய, சுமார் 2000 இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு, நமது கற்றல் மற்றும் மேம்பாட்டு மையம், திண்டுக்கல், காந்தி கிராமப் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் பயிற்சி பள்ளிகள் வழியாக, பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுரங்கப் பொறியியல் பட்டயப் படிப்பின் சிறப்பு அம்சங்கள்


சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

- இப்படிப்பு, இயற்கை வளங்களான, தாதுக்களைப் பிரித்து எடுக்கும் வழிமுறை மற்றும் செயல்பாடுகள் சார்ந்த, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்களைக் கற்றுத் தரும் பொறியியல் துறை சார்ந்தது.
- இப்படிப்பினை முடித்தவர்கள், சுரங்கப் பொறியியல் துறையில், வேலை வாய்ப்பு பெற தயார்படுத்தப்பட்டிருப்பர்.
- சுரங்க இயக்கம், சுரங்க மேலாண்மை மற்றும் வடிவமைப்பு, சுரங்கப் பணியாளர்களுக்கான உடல் நலம் மற்றும் பாதுகாப்பு போன்றத் துறைகளில், இப்படிப்பை முடித்தவர்கள் பணிகளைப் பெறமுடியும்.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம், நமது நிறுவனத்துடன் கலந்துரையாடி, பாடத்திட்டங்கள், விதிமுறைகள் மற்றும் தேர்விற்கானத் திட்டங்கள் நிர்ணயிக்கும்.
- சுரங்கம் சார்ந்த பாடங்களில், வகுப்பு எடுப்பதற்குத் தேவையான ஆசிரியர்களை, நமது நிறுவனம் ஏற்பாடு செய்வதுடன், செய்முறைப் பயிற்சி மற்றும் திட்ட வழிகாட்டுதல்களை, பல்கலைக்கழகம் கேட்கும் பட்சத்தில் வழங்கும்.
- செமஸ்டர் முறையிலான இந்த மூன்று ஆண்டு, சுரங்கப் பொறியியல் பட்டயப்படிப்பில் சேர்வதற்கு, 10–ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- நமது நிறுவனத்திற்கு, நிலம் கொடுத்தவர்களுக்கு, இப்படிப்பில் சேர 50% இடங்கள், பல்கலைக்கழகத்தால் ஒதுக்கப்படும்.
- நிலம் கொடுத்தவர்களுக்கான 50% இட ஒதுக்கீடு பெற்றுக் கல்வி பயிலும், மாணாக்கர்களின் கல்விக் கட்டணத்தில், 50%, நமது நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு திரும்ப அளிக்கப்படும்.
- நமது நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில், மாணவர்கள் சேர்க்கை நடைபெறுவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை நமது நிறுவனம் மேற்கொள்ளும்.
- சுரங்கப் பொறியியலில் பட்டயப் படிப்பு மேற்கொள்ளும் இம்மாணவர்கள், நமது சுரங்கங்களில் பயிற்சி மேற்கொள்வதன் மூலம், அதிக வேலை வாய்ப்பு பெற வாய்ப்பு ஏற்படும்.

தூத்துக்குடியில், NTPL நிறுவனம் மேற்கொண்டு வரும், சமூக மேம்பாட்டுப் பணிகள்

தூத்துக்குடி, என்.டி.பி.எல். நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், 2015–16ம் நிதியாண்டின் ஒதுக்கீட்டிலிருந்து, ரூ.47 லட்சம் மதிப்பிலான, 600 டெஸ்க் மற்றும் பெஞ்சுகளை, தூத்துக்குடி வருவாய் மாவட்டத்தில் உள்ள 21 அரசு பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 18.08.2016 அன்று, நடைபெற்ற நிகழ்ச்சியில், NTPL தலைமை செயல் அதிகாரி, திரு A.R. நீலகண்ட பிள்ளை, திரு M. பிரபாகர், GM/O&M, திரு P. ராதாகிருஷ்ணன், DGM/Civil ஆகியோர் இந்த உதவியினை வழங்க, தமிழக அரசின் சார்பில், தூத்துக்குடி மாவட்ட தலைமை கல்வி அதிகாரி, திரு M. ராமகிருஷ்ணன் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி S. மலர்கொடி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகளை வழங்கும் NTPL நிறுவன CEO மற்றும் உயர் அதிகாரிகள்

முன்னதாக, 2014–15ம் ஆண்டில், அம்மாவட்டத்தின் 7 பள்ளிகளுக்கு, ரூ.24 லட்சம் செலவில், 300 டெஸ்க் மற்றும் பெஞ்சுகள், 13.10.2014 அன்று வழங்கப்பட்டன.

2013–14ம் ஆண்டு, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலய பாதுகாப்பு நிதிக்காக, NTPL நிறுவனம் சார்பாக தமிழ்நாடு வனத்துறையிடம் ரூ.25 லட்சம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மகளிருக்கு வருமானம் ஈட்டுவதற்கான சுயதொழில் பயிற்சிகள்

நமது நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் மூலம், சுற்றுவட்டார கிராமப் பெண்களுக்கான, பல்வேறு சுயதொழில்சார்ந்த பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

அந்தவகையில், சமீபத்தில், நெய்வேலி மகளிர் மன்றம் மற்றும் தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மூலம் தையல் பயிற்சி, அழகுக் கலை பயிற்சி, அழகு மிக்க ஆபரணங்கள் செய்தல் மற்றும் இலகுரக வாகனங்களை இயக்குதல் போன்ற 4 பயிற்சிகள் நடத்தப்பட்டன. முதல் மூன்று பயிற்சி வகுப்புகள், நெய்வேலி மகளிர் மன்றத்தினரால் வட்டம்–9ல் அமைந்துள்ள மகளிருக்கான பயிற்சி மையத்தில் நடத்தப்பட்டன. ஓட்டுனர் பயிற்சி ஒரு,தனியார் ஓட்டுனர் பயிற்சிப் பள்ளி மூலம் நடத்தப்பட்டது. முன்னதாக, 120 பெண்கள், 40 நாள் அடிப்படை மற்றும் 20 நாள் உயர்நிலை தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.



தையல் பயிற்சி

சமீபத்தில், 30 பெண்கள் இந்த வகுப்பினை நிறைவு செய்துள்ளனர். அடுத்த வகுப்பு, 21.11.2016 அன்று துவங்கப்பட்டது. ஒவ்வொன்றும் 15 நாள் கால அளவு கொண்ட, அழகு கலை அடிப்படை மற்றும் உயர்நிலை பயிற்சி வகுப்புகளில், 50 பெண்கள் ஏற்கனவே, பயிற்சி பெற்றுள்ளனர். சமீபத்தில் 25 பெண்கள் பயிற்சி பெற்றுள்ள நிலையில், அதன் அடுத்த வகுப்பு, 29.10.2016 அன்று துவங்கப்பட்டுள்ளது. அபூர்வ வகைக் கல் நகைகளை உருவாக்கும் 15 நாள் பயிற்சி வகுப்பில், 50 பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இலகுரக வாகன ஓட்டுதலுக்கான 90 நாள் பயிற்சி வகுப்பில், 50 பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 01.10.2016 அன்று துவங்கப்பட்ட ஓட்டுநர் பயிற்சி வகுப்பில், 40 பெண்கள் கலந்து கொண்டு, பயிற்சி பெற்று வருகின்றனர். இப் பயிற்சி 31.12.2016 அன்று நிறைவு பெறும்.



அழகுக் கலைப் பயிற்சி

ஒடிசாவில், திட்டப்பணிகளுக்கு முன்பே சமூகப் பணிகளைத் தொடங்கிய நமது நிறுவனம்

நமது மின் நிலையங்களுக்கு தேவையான, நிலக்கரியைப் பெறுவதற்காக, மத்திய நிலக்கரி அமைச்சகம், ஒடிசா மாநிலம் தலபிரா நிலக்கரி சுரங்கம் 2 மற்றும் 3னை நமது நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், அங்கு பணிகள் தொடங்குவதற்கு முன்னரே, நமது நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் மூலம், 14.07.2016 அன்று, ஒடிசாவில் நடைபெற்ற பூரி, ஜகன்னாதர் தேர் உற்சவத்தில், பக்தர்கள் பயன்பெறும் வகையில், தரமான உணவு மற்றும் குடிநீரினை, இலவசமாக வழங்கி ஒடிசா மாநிலத்தில் நமது சமூக மேம்பாட்டுப் பணியை, மிக எளிமையாகத் தொடங்கி உள்ளது.



அன்னதானம் வழங்கும் நமது அதிகாரிகள்

விடுதலை நாள் விழாக் கொண்டாட்டங்கள் - 2016



பர்சிங்சர் திட்டத்தில்...

நாட்டின் 70–வது விடுதலை நாள் விழா, நெய்வேலியில் 15.08.2016 அன்று, வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நகர நிர்வாக அலுவலகத்தில் அமைந்துள்ள தேசப் பிதா, மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு, நமது நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் மாலை அணிவித்து இக்கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், பாரதி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்வில், இவ்விழாவிற்கு கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட, நமது நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், திரு A.R. அன்சாரி அவர்கள் மற்றும் நமது இயக்குநர்கள் முன்னிலையில், Dr. ஆச்சார்யா, தேசியக்கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து மத்திய தொழிலகப் பாதுகாப்பு படையினர், என்.எல்.சி. இந்தியா பாதுகாப்புப் படை, ஊர்க் காவல் படை, சாரண சாரணியர், தேசிய மாணவர் படை தொண்டர்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவமணிகள் வழங்கிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

Dr. ஆச்சார்யா அவர்கள், தனது செய்தியில், வேற்று நாட்டினரின் ஆதிக்கத்தில் இருந்து, நமது நாடு சுதந்திரம் அடைவதற்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மரியாதையுடன் கூடிய புகழாரம் சூட்டினார். மேலும், கடந்த 69 ஆண்டுகளாக நமது நாட்டைக் கட்டியெழுப்பி, ஒரு வலிமை மிக்க நாடாக உருவாக்கிய நமது முன்னாள் தலைவர்களுக்கும், முன்னோர்களுக்கும் அஞ்சலி செலுத்தினார். இன்று காணும் நமது நிறுவனத்தினை கடந்த 60 வருடங்களாக தங்கள் உழைப்பின்மூலம் வளர்த்துவந்த முன்னாள் ஊழியர்களுக்கும், தலைமை அதிகாரிகளுக்கும் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.



அணிவகுப்பினைப் பார்வையிடும் நிறுவனத் தலைவர்



நிதித்துறை இயக்குனர் விருது வழங்குகிறார்



மின்துறை இயக்குனர் விருது வழங்குகிறார்

நமது தலைமை அலுவலகத்தில், 26.09.2016 அன்று, பழுப்பு நிலக்கரி நுகர்வோருக்கான சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, நமது சுரங்கத்துறை இயக்குனர், திரு சுபீர் தாஸ் தலைமை தாங்கினார். அவ்வமயம், திரு S. திருநாவுக்கரசு, ED/CP&PM பழுப்பு நிலக்கரி விற்பனை குறித்து, நமது நிறுவனத்தின் தற்போதைய நிலையை எடுத்து கூறினார். இந்த சந்திப்பில், TAQA நெய்வேலி மின்சக்தி நிறுவனம், டால்மியா சிமெண்ட் பாரத் நிறுவனம், செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம், அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனம், TNPL நிறுவனம், மால்கோ ஆற்றல் நிறுவனம், JSW எஃகு நிறுவனம், டான்செம் நிறுவனம், தமிழக அரசின் விவசாய ஆணையர் அலுவகம், அம்புஜா தொழிலகங்கள் மற்றும் எக்செல் என்விரான் சிஸ்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

நமது நிறுவனம் சார்பாக, Dr. T. கண்ணதாசன், CGM/Geology, திரு R. பாலசுப்பிரமணியன், GM/Fin. திரு N. அனந்தராமன், GM/Contracts, திரு K. சுப்பிரமணியன், GM/MM & Disposal மற்றும் திரு Y.M.S. பிள்ளை, DGM/CP&PM ஆகியோர் பங்கேற்றனர்.

சென்னையைச் சார்ந்த ஏலம் நடத்தும் M.S.T.C. நிறுவனம் சார்பாக, அதன், DGM, திருமதி V. வசந்தி, மற்றும் DM, திரு N. சண்முகம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், நமது சுரங்கங்களின் செயல் இயக்குனர் திரு S.A.F. காலித், வணிகப் பிரிவின் செயல் இயக்குனர், திரு R. மோகன், திரு அரவிந்த் குமார், CGM/M-IA மற்றும் திரு M.R. ரவிச்சந்திரன், GM/Mktg.&Sales ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய, சுரங்க இயக்குனர், தற்போது இருப்பில் உள்ள அதிக அளவிலானப் பழுப்பு நிலக்கரியை பயன்படுத்திக் கொள்ளுமாறு வாடிக்கையாளர்களைக் கேட்டுக் கொண்டதுடன், நீண்ட கால அளவில் பழுப்பு நிலக்கரி வழங்க, அடுத்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஏலத்திலும் ஆர்வத்துடன் பங்கேற்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டார்.



சாதனைகள்

புதிய மென்பொருள் உருவாக்கிய நமது ஊழியர்



A. சிவகுமரன்

நமது நகர நிர்வாகத்துறையின் கணினி சேவைப் பிரிவு, பல்வேறு அலுவலகப் பயன்பாட்டிற்காக, கணினியில் இயங்கும் 25 முக்கிய செயலாக்க வசதிகளை உருவாக்கியுள்ளது. அவற்றில் ஒன்றான, ஆரக்கிள் மொழியின் அடிப்படையில் இயங்கும், நூலகத் தகவல் அமைப்பு மற்றும் ஸ்மார்ட் அட்டை வசதியை திரு A. சரவணன், DCM/EDP மற்றும் திரு A. சிவகுமரன், STO/CS/TA ஆகியோர் இணைந்து உருவாக்கினர். இந்த வசதி 22.10.2015 அன்று பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வசதியை செயல்படுத்தும்போது ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், இந்த மென்பொருளின் செயல்திறனை மேம்படுத்தவும், திரு சிவகுமரன், மேலும் ஒரு கூடுதல் தணிக்கை வசதியை உருவாக்கி இதற்கு தீர்வு கண்டார். தற்போது, இந்த புதிய வசதி, எவ்விதத் தடங்கலுமின்றி இயங்கி வருகிறது. இந்த வசதியானது, உலக அளவிலான எந்த இணைய தளத்திலும், அமைக்கப்படவில்லை. இதுகுறித்து, இணையத்தில் பதிவிட்டபின், உலக அளவில் பல்வேறு மென்பொருள் வல்லுநர்கள், நமது ஊழியருக்கு, பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தொழுநோய் மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாகப் பங்கேற்ற, நெய்வேலி மாணவர்



Dr. T. புகழேந்தன்

சீன நாட்டின் பீஜிங் நகரில் நடைபெற்ற 19–வது சர்வதேச தொழுநோய் மாநாட்டில், இந்தியாவின் சார்பாக, இளம் விஞ்ஞானிப் பிரிவில், ஜவகர் மெட்ரிக் பள்ளியின் முன்னாள் மாணவரும், செங்கல்பட்டு மத்தியத் தொழுநோய் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்து வருபவருமான, Dr. T. புகழேந்தன், (S/o, திரு K. தங்கராஜு, Sr. Foreman/CERS), பங்கேற்றார். 18.09.2016 முதல் 21.09.2016 வரை நடைபெற்ற இம்மாநாட்டில், 13 நாடுகளைச் சேர்ந்த, 650 சர்வதேச வல்லுநர்கள் பங்கேற்றனர். இவரது விமானப் பயணச் செலவினை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும், அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் ஏற்றுகொண்டது. இவர் தங்குவதற்கான வசதிகளை மத்திய சர்வதேச அறிவியல் கூட்டமைப்பு ஏற்பாடு செய்தது. அம்மாநாட்டில், சர்க்கரை வியாதிக்குரிய மெட்ஃபார்மின் மருந்தானது, 'எரிதினா நோடோசன் லெப்ரோசம்' என்ற நாள்பட்ட வியாதியைக் குணப்படுத்த எவ்வாறு உதவுகிறது என்ற இவரது ஆய்வுக் கட்டுரை, பங்கேற்றவர்களால் பாராட்டப்பட்டது.

தமிழக கிரிக்கெட் அணியைத் தேர்வு செய்யும் குழுவில், நமது நிறுவன கிரிக்கெட் பயிற்சியாளர்



N. ராஜீவ்

19 வயதிற்குட்பட்ட தமிழக கிரிக்கெட் அணியின் வீரர்களைத் தேர்வு செய்வதற்காக, தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் (TNCA), அமைக்கப்பட்டுள்ள 4 பேர் குழுவில் ஒருவராக, நமது விளையாட்டுக் கட்டுபாட்டு வாரியத்தின் பயிற்சியாளர் திரு N. ராஜீவ், AO/MC, நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் வாரியத்தின் உறுப்பு அமைப்பான, TNCA தமிழ்நாட்டின் கிரிக்கெட் விளையாட்டினை நிர்வகித்து வருகிறது.

திரு ராஜீவ், 1985 முதல் 1991 வரை ரஞ்சி டிராபி போட்டிகளில் கேரள அணியில் விளையாடியது மற்றும் 14 வயதிற்குட்பட்ட தமிழக கிரிக்கெட் அணியினைத் தேர்வு செய்யும் குழுவில் இடம்பெற்றிருந்தது போன்றத் தகுதிகள் மூலம், இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தின் 34 மாவட்டங்களில் உள்ள கிரிக்கெட் அணிகளுக்கிடையேயானப் போட்டிகளில், 30 வீரர்கள் முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் சென்னை அணியுடன் விளையாடும்போது, இறுதிக் கட்டமாக, 15 நபர்கள் கொண்ட தமிழகக் கிரிக்கெட் அணி தேர்வு செய்யப்படும்.

சிறந்த மனிதநேயம் மற்றும் பாரம்பரியத்திற்கான விருதினைப் பெற்ற திரு ராஜ்கார்த்திக்

உத்திரப்பிரதேசம், அமிதி பல்கலைக்கழக, சென்னை வளாகத்தின், முன்னாள் மாணவரான, திரு N.M. ராஜ்கார்த்திக், (S/o திரு R. மோகன், CM/C&P/NTPL, தூத்துக்குடி) வணிக மேலாண்மைத் துறையில் (2012–15) பட்டப்படிப்பு பயின்று, 9.55 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றதன் மூலம், தங்கப் பதக்கத்தையும், பாராட்டு பத்திரத்தினையும் பெற்றார். அத்துடன், சிறந்த மனிதநேயம் மற்றும் பாரம்பரியத்திற்கான, "ஸ்ரீ பால்ஜித் சாஸ்திரி" விருதினையும் இவர் பெற்றுள்ளார். ஜவஹர் MHSS–ன் முன்னாள் மாணவரான இவர், தற்பொழுது, தனது பட்டமேற்படிப்பினை, வணிகத் தகவல் மேலாண்மைத் துறையில், ஆஸ்திரேலியா நாட்டின், மெல்போர்ன் நகரில், மோனாஷ் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றார்.



விருது பெறுகிறார் N.M. ராஜகார்த்திக்

539 மாணவமணிகளுக்கு ராஜ்ய புரஸ்கார் விருது

நெய்வேலி பாரத சாரண, சாரணியர் சங்கத்தினைச் சார்ந்த, 539 மாணவமணிகளுக்கு, இளைஞர்களிடையே உடல், அறிவுசார், சமூக மற்றும் ஆன்மீக திறமைகளை வளர்த்தமைக்காக, ராஜ்ய புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநர் மாளிகையில், 22.08.2016 அன்று, நடைபெற்ற விழாவில், அப்போதைய, மாண்புமிகு தமிழக ஆளுநர், டாக்டர் கே. ரோசையா அவர்கள், 2012–13, 2013–14 மற்றும் 2014–15ம் ஆண்டுகளுக்கான ராஜ்ய புரஸ்கார் விருதை வழங்க, நெய்வேலி மாணவர்களின் சார்பில், ஜவகர் HSS (CBSE), மாணவர், M.S. சக்திகுமாரும், மாணவிகள் சார்பில் புனித ஜோசப் குளூனி MHSS மாணவி, S. திவ்ய பிரபாவும் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில், தமிழக அரசின், முன்னாள் பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சர், திரு P. பெஞ்சமின் மற்றும் கல்வித்துறையின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

பாரத சாரண, சாரணியர் சங்கத்தின் மாவட்ட செயலர், திரு P. சேகர், பயிற்சியாளர்கள் திரு P. பார்த்திபன் மற்றும் திருமதி மாலதி ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு மாணாக்கர்களை வழிநடத்தினர்.



மாநில ஆளுநரிடமிருந்து விருது பெறும் M.S. சக்திகுமார்

வாழ்த்துகள் !

புகழ்பெற்ற கல்லூரிகளில் பயில, தொடர்ந்து வாய்ப்பு பெற்றுவரும் நெய்வேலி மாணவமணிகள்!

இந்திய தொழில்நுட்பக் கழகங்கள்



பேட்ரிக் ஜார்ஜ்
S/o லூசி மோள் சாக்கோ
CM/Elec./PSE/CO
All India Rank: 4177
B. Tech. (CS) IIT, Palakkad



K. பவன் பிரசாத்
S/o V. கிருஷ்ணமூர்த்தி
CM/Elec./NNTPP
All India Rank: 6570
B. Tech. (Biological Science) IIT, Chennai



N. ஷர்மிளி பூஜா
D/o S. நரேந்திரகுமார்
All India Rank: 9972
B. Tech. (Engg. Design)
IIT, Chennai



M.E. ஜெயந்த்
S/o M. இளங்கோவன்
CM/PSE/CO
All India Rank: 14214
B. Tech. (Mech.), IIT, Chennai

2016–17ம் கல்வியாண்டில், நெய்வேலி, வட்டம்–5 ஜவஹர் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற 25 மாணவமணிகள், இந்திய தொழில்நுட்பக் கழகங்களில் பயிலத் தகுதி பெற நடத்தப்படும் இறுதிக் கட்ட நுழைவுத் தேர்வில் (IIT-JEE Advanced) தேர்ச்சி பெற்றுள்ளனர். இருப்பினும், அவர்களில் 4 மாணவமணிகள் பாலக்காடு மற்றும் சென்னை IITகளில் பயின்று வருகின்றனர். எஞ்சிய 21 மாணவமணிகளான G.சனத் பாலாஜி, S.அஞ்சு, J.K. நிதின் ராகவ், ரிக்வித் மனோஜ், R.சுதர்சன் பரத்வாஜ், G. அர்ச்சனா, R. ஸ்ரீவித்யா, S.சுதர்சன், V.தரண்யா, V.S.விபாஷன், G.கணேஷ், R.ப்ரதீப் குமார், A.R.சிபி, S.சுதர்சன், P.V.முனி குமார், R.K.அஜய்பிரபு, S.நிதிஷ், V.உஜ்வால் சாய், R.கீர்த்திராஜ், S.வம்சி ஸ்வரூப் மற்றும் P.நிஹால் ஆகியோர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், IIST, BITS மற்றும் NIT போன்ற இதர புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் பயின்று வருகின்றனர்.

மருத்துவக் கல்லூரிகள்



J.R. ஹரிதா ரெட்டி
D/o J. ரவிகந்தன்
Sr.Tech.Gr.I/NLCI GH
SJCMHSS : 197.50#
ESIC Medical College & PGIMSR, Chennai



R. பூஜா ஸ்ரீ
D/o K. ராஜா
EE/WCTP/TPS-II Expn.
SJCMHSS : 197.50#
Thanjavur Medical College, Thanjavur



M. மரியம்
D/o A. S M ராசூல் பாஷா
Chief Tech./LA/Mine-I
SJCMHSS : 197.25#
Thanjavur Medical College, Thanjavur



A. இந்துமதி
D/o T. அழகப்பன்
APS/NLCI GH
197#
Stanley Medical College, Chennai



M. கீர்திகா
D/o S. மதியழகன்
Chief Tech./CWS/NSU
JMHSS : 195#
Thanjavur Medical College, Thanjavur



S.K. இளமதி
D/o M. சரஸ்வதி
ANS/NLCI GH
194.75#
Rajah Muthiah Medical College, Chidambaram



K. அட்சயா
D/o G. கிருஷ்ணமூர்த்தி
SG SME Opr./Mine-II
194.75#
Thanjavur Medical College, Thanjavur



T. ஸ்ரீதா
D/o T.V. கிருஷ்ண ராவ்
CM/GWC/Mine-II
JHSS; 2316*
Stanley Medical College, Chennai

2016–17ம் கல்வியாண்டில், 16 நெய்வேலி மாணவமணிகள் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பயில இடம் பெற்றுள்ளனர். இம்மாணாக்கர்களில் 8 பேர் வட்டம்–5, ஜவஹர் மேல்நிலைப்பள்ளியிலும் (JHSS), 3 பேர் புனித ஜோசப் குளுனி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் (SJCMHSS), 2 பேர் ஜவஹர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும் (JMHSS) பயின்றார்கள். இவர்களுடன், 3 நெய்வேலி மாணவர்கள் தங்கள் மேல்நிலைக் கல்வியை வெளியூர் பள்ளிகளில் நிறைவு செய்து, மருத்துக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.



R. ஹரிணி
D/o S. ரகுத்தமன்
ADGM/PSE/CO
JHSS; 29908*
Devaraj Urs Medical College Kolar District



K. சிவசங்கரன்
S/o M.S. குமரேசன்
Chief Tech. SME/OH/Mine-I
JMHSS; 32305*
Kilpauk Medical College, Chennai



ஹரிணி B. நாராயணன்
D/o K. பத்ரி நாராயணன்
CM/CO
JHSS; 39631*
Ramachandra Medical College Chennai



A.T. நகுல் ப்ரனவ்
S/o A.J. திருகுமார்
ACM/HR/TA
JHSS; 47071*
Kalinga Inst. of Medical Science, Bhuvaneshwar



C. அஜய் ஸ்ரீநிவாஸ்
S/o P. சார்லஸ்
CM/SME/Mine-I
JHSS; 91076*
Devaraj Urs Medical College Kolar District



S. பிரசன்னா
S/o R. ஸ்ரீதரன்
Chief Tech./Purchase/MMC
JHSS; 116706*
Mahatma Gandhi Medical & Research Inst., Puducherry



M.S. கெவின் ரோஸ்
S/o M.S. சகாய வின்சென்ட்
Foreman/ETM/TA
JHSS; 223791*
Madha Medical College Chennai



A. அகிலன்
S/o B. அழகேசன்
Voc. Instructor/NLCBHSS
JHSS; 230276*
Mahatma Gandhi Medical & Research Inst., Puducherry

\# Medical cut-off * NEET All India Overall Rank

இம்மாணவமணிகள் திறன்மிக்க பொறியாளர்களாகவும், மனித நேயமிக்க மருத்துவர்களாகவும் தகுதி பெற மின்மலரின் வாழ்த்துகள்!

என்எல்சி இந்தியா நிறுவன வைர விழா நினைவு மாநில மேஜைப் பந்தாட்டப் போட்டிகள்

நமது நிறுவன வைர விழா கொண்டாட்டத்தின் நினைவாக, நமது விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியமும் (NLCI SCB), நெய்வேலி லிக்னைட் நகர் மன்றமும் (NLCC), கடலூர் மாவட்ட மேஜைப் பந்து சங்கத்துடன் (CDTTA) இணைந்து, 7வது மாநில தரவரிசைக்கான மேஜைப் பந்தாட்டப் போட்டிகளை, 19.08.2016 முதல் 21.08.2016 வரை NLCC வளாகத்தில் நடத்தின.



போட்டியைத் தொடங்கி வைக்கும் நிறுவனத் தலைவர் மற்றும் சுரங்க இயக்குனர்

நமது நிறுவனத் தலைவர் Dr. சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் இப்போட்டிகளை 19.08.2016 அன்று துவக்கி வைத்தார். அவர் தனது உரையில், நமது நிறுவனம் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து காமன் வெல்த் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் அளவிற்கு, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை தகுதியாக்கி வருவதாகக் கூறினார்.

இப் போட்டியில், நெய்வேலி, சென்னை, ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை மற்றும் கோயம்புத்தூரைச் சார்ந்த சுமார் 650 போட்டியாளர்கள், பல்வேறு வயதினருக்குரிய 12 பிரிவுகளில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு மேஜைப் பந்து சங்கத்தின் (TNTTA) தலைமை நடுவர், திரு M.S. திலிப்குமாருடன், சென்னை மற்றும் இதர மாவட்டங்களைச் சேர்ந்த 19 நடுவர்கள், இப்போட்டிக்கு நடுவர்களாக செயல்பட்டனர். பல சர்வதேச விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

NLCC தலைவர், திரு S.A.F. காலித் (ED/Mines), NLCC செயலர் Dr. T. கண்ணதாசன் (CGM/Geology), TNTTA கௌரவப் பொருளாளர், திரு ஜாக்கப் செல்வகுமார் ஆகியோர் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.



வெற்றி பெற்றவர்களுடன் திரு S.A.F. காலித் மற்றும் முக்கியப் பிரமுகர்கள்

இப்போட்டிக்கான, நிறைவு விழா, 21.08.2016 அன்று நடைபெற்றது. வெற்றியாளர்களுக்கு திரு S.A.F. காலித் அவர்கள் ரூ.91,300 ரொக்கப் பரிசுத்தொகையும், சான்றிதழ்களையும் வழங்கினார். வெற்றி பெற்றவர்கள் தேசிய அளவில் நடக்கும் போட்டியில், தமிழகம் சார்பாக பங்கேற்பார்கள். NLCC மன்றத்தின் மேஜைப் பந்து பிரிவிற்கான நியமன உறுப்பினர் திரு N. சொக்கலிங்கம் (CM/Civil/TPS-II Expn.), CDTTA செயலரும் பயிற்சியாளருமான திரு C. சத்தியமூர்த்தி (Building Inspector, TA), பயிற்சியாளர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தப் போட்டிகள் சிறப்பாக நடக்கத் துணை புரிந்தனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கான முதல் சிறப்புத் தடகளப் போட்டி

நமது கல்வித் துறை, என்எல்சி இந்தியா நிறுவனத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கான முதலாவது சிறப்புத் தடகளப் போட்டி – 2016 – னை நெய்வேலி பாரதி விளையாட்டரங்கில் 07.08.2016 அன்று நடத்தியது. இப்போட்டிகளில், சமீபத்தில் நமது நிறுவனத்தில் பணியில் சேர்ந்த ஊழியர்கள் உட்பட, 24 மகளிரும் 45 ஆடவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



போட்டியில் வெற்றி பெற்றவர்கள் திரு C. துரைக்கண்ணு, (GM/Civil) மற்றும் நமது நிறுவன அதிகாரிகளுடன்

பார்வையற்றவர்களுக்கானப் பிரிவு, உடல் ஊனமுற்றோருக்கானப் பிரிவு, காது கேளாதோர் மற்றும் வாய் பேசமுடியாதவர்களுக்கானப் பிரிவு என 3 பிரிவாக இப்போட்டி நடத்தப்பட்டது. குண்டு எறிதல், வட்டு எறிதல், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல், கிரிக்கெட் பந்து எறிதல், ஓட்டப்பந்தயம் (25 மீ மற்றும் 50 மீ), ஸ்கிப்பிங் மற்றும் உட்கார்ந்து எழுதல் போன்ற 8 வகையான போட்டிகள் அன்று நடத்தப்பட்டன.

ஆண்களுக்கான பிரிவில் திரு A. வாஹித் அலியும் (Asst. Service Worker/ S&FS) பெண்களுக்கான பிரிவில் செல்வி V. நிர்மலா தேவியும் (Asst. Service Worker/NLCI GH) தனி நபர் சாம்பியன் பட்டங்களை வென்றனர். அன்று மாலை பாரதி விளையாட்டரங்கில் நடைபெற்ற பரிசு வழங்கும் நிகழ்ச்சியில், திரு C.துரைக்கண்ணு (GM/Civil) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். முன்னதாக, போட்டிகளின் தொடக்கத்தில், திரு K.ஜெயக்குமார் (ACM/Occupational Health) தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

மண்டல விளையாட்டுப் போட்டிகளை நடத்திய நமது நிறுவனம்

தமிழக அரசின் கல்வித்துறை சார்பாக நடத்தப்படும் குறிஞ்சிப்பாடி மண்டல அளவிலான, "பாரதியார் தின மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள்–2016–17", நெய்வேலி, மந்தாரக்குப்பம் என்.எல்.சி. இந்தியா மேல்நிலைப்பள்ளியில், 02.09.2016 அன்று நடைபெற்றது. இப்போட்டியை, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், திருமதி G. ராஜதிலகம் முன்னிலையில், திரு S. ஸ்ரீதர் (ED/TA, PR, CSR & Edn.), தொடங்கி வைத்தார்.



ஒரு மாணவிக்கு சான்றிதழ் வழங்கும் ED/TA

நமது நிறுவனம், இந்த போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. 34 பள்ளிகளைச் சார்ந்த, சுமார் 700 மாணாக்கர்கள் பங்கேற்ற இப்போட்டிகளில், 13 வெளியரங்கு மற்றும் 4 உள்ளரங்குப் போட்டிகள், பல்வேறு இடங்களில் நடைபெற்றன. இப்போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்கள், கல்வி மாவட்ட அளவில் நடக்கவிருக்கும் போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெற்றனர்.

பள்ளிகளுக்கிடையேயான 9–வது புனித ஜோசப் மாநில விளையாட்டு விழா–2016–17

கால்பந்து

என்.எல்.சி. இந்தியா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கால்பந்து அணி, சென்னையில், புனித ஜோசப் கல்விக் குழுமம் 06.08.2016 முதல் 08.08.2016 வரை நடத்திய 9–வது புனித ஜோசப் மாநில அளவிலான, பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டு விழா–2016–17–ன், கால் பந்து பிரிவில் முதலிடம் பெற்றது.

முதல் சுற்றில் நமது அணி, சென்னை புனித மைக்கேல் கல்வியகம் மற்றும் சிவகங்கை, ராஜா சர் மேல்நிலைப் பள்ளி அணியினரை வென்று, இரண்டாவது சுற்றில் கிருஷ்ணகிரி விளையாட்டுப் பள்ளியுடன் சமன் செய்து, சென்னை வெஸ்லி பள்ளி, தூத்தூர் பயஸ் XI அணி ஆகியவற்றுடன் முறையே 2–1 மற்றும் 4–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சர்வதேச கைப்பந்து போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற வீரர் திரு ஷெல்டன் மோசஸ் நமது அணிக்கு கோப்பையும், சான்றிதழையும் வழங்கினார்.





என்.எல்.சி. இந்தியா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கால்பந்து மற்றும் தடகள அணிகளின் வீரர்கள் நமது நிறுவனத் தலைவர், **ED/TA,** கல்வித்துறை **DGM,** விளையாட்டுப்பள்ளியின் தாளாளர் மற்றும் பயிற்றுனர்களுடன்

தடகளம்

சென்னையில் 13.08.2016 மற்றும் 14.08.2016 அன்று நடைபெற்ற, 2016–17ம் ஆண்டிற்கான, 9–வது புனித ஜோசப் மாநில அளவிலான, பள்ளிகளுக்கிடையேயான தடகளப் போட்டியில், என்.எல்.சி. இந்தியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவன் A.ராஜா, தனிநபர் சாம்பியன் பெற்றுள்ளார். மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் 90 பள்ளி மாணவமணிகள் இப்போட்டியில் பங்கேற்றனர். நமது அணி 49 புள்ளிகள் பெற்று, ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் வென்றது. சென்னை, புனித ஜோசப் கல்வி நிறுவனங்களின் மேலாண் இயக்குநர், திரு B. பாபு மனோகரன் முன்னிலையில், சர்வதேச தடகள வீரர் திரு அஜித் அவர்கள் வெற்றிக் கோப்பையினை நமது மாணவர்களுக்கு வழங்கினார். நமது தடகள மற்றும் கால்பந்து வீரர்கள், அவர்களது பயிற்சியாளர்கள் திரு P. ஜேம்ஸ், திரு D. ஜான்சன் ஆகியோரை நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா பாராட்டினார்.

கால்பந்து

நெய்வேலி ஜவஹர் HSS மற்றும் ஜவஹர் மெட்ரிக் HSS மாணவர்கள் இடம்பெற்ற தமிழக கால்பந்து அணி (U-10), ஹைதராபாதில் 16.04.2016 அன்று நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான GR கால்பந்து போட்டி–2016–17ல் பங்கேற்றது. நமது விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பயிற்சியாளர் திரு M.ரவீந்திரன் இம்மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கினார்.



ஜவகர் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் பயிற்சியாளருடன் மாணவர்கள்

தடகளம்

இந்திய ஊரக விளையாட்டுக் கூட்டமைப்பு, 27.08.2016 மற்றும் 28.08.2016 அன்று விருத்தாச்சலத்தில் நடத்திய தேசிய தடகளப் போட்டியில், என்.எல்.சி. இந்தியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் D. ஹரிபிரசாத், P. கவியரசன் மற்றும் P. ராஜ்குமார் முறையே 400 மீ. ஓட்டம், மும்முறை தாண்டுதல், 100 மீ. ஓட்டத்தில் தங்கப் பதக்கங்கள் வென்றனர். அப் பள்ளி மாணவன் K. பிரகாஷ், நீளம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கோ–கோ



R. பிரியதர்ஷினி

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில், அம்மாநில கோ–கோ சங்கம், மாணவ, மாணவிகளுக்–கான, 27–வது சப்–ஜூனியர் தேசிய கோ–கோ போட்டிகள்–2015–16ஐ 08.06.2016 முதல் 12.06.2016 வரை நடத்தியது. இப்போட்டியில் புனித ஜோசப் குளூனி பள்ளி மாணவி R. பிரியதர்ஷினி (D/o.திரு N. ரவிச்சந்திரன், JAA Gr.II/SCB/TA) இடம் பெற்ற தமிழக அணி 5வது இடம் பெற்றது. மேலும், ஜவஹர் HSS (CBSE) மாணவன் M.ஹமேஷ் (S/o.திரு M. முருகேசன்), தமிழக அணியில் இடம் பெற்றிருந்தார். இம்மாணக்கர்களுக்கு நமது விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரிய கபடி மற்றும் கோ–கோ பயிற்சியாளர் திரு K.R. ராஜேந்திரன் பயிற்சி வழங்கினார்.



M.ஹமேஷ்

தடகளம்

தெலங்கானா மாநிலம், கரீம் நகரில் நடைபெற்ற 28வது தென்மண்டல ஜூனியர் தடகளப் போட்டியில் புனித ஜோசப் குளூனி பள்ளி மாணவி S. ஜூஹி சுல்தானா (D/o.திரு M. ஷெரீஃப் கான், Foam Operator, Fire Services) தமிழகத்தின் சார்பில் பங்கேற்று, பென்டத்லான் பிரிவில் (U-16), தங்கம் வென்றார். 04.10.2016 முதல் 05.10.2016 வரை நடைபெற்ற இப்போட்டியில், தென்மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 1200 தடகள வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர். மேலும் இப்போட்டியில் ஜவஹர் அறிவியல் கல்லூரி மாணவி, G. மோகனா (U-20) (D/o.திரு S. கணபதி, Sr. Tech.Gr.I/SME/Mine-I) 4x100 மீ. தொடர் ஓட்டத்தில் தங்கமும், 100 மீ. தடை ஓட்டம் மற்றும் ஹெப்டத்லான் பிரிவில் வெள்ளி பதக்கங்களும் வென்றுள்ளார்.



திரு **K.** முருகன், **CM/SCB** மற்றும் பயிற்றுனர்களுடன் நெய்வேலி மாணவிகள்

லக்னோவில், 27.09.2016 முதல் 30.09.2016 வரை நடைபெற்ற தேசிய சீனியர் தடகளப் போட்டியில், சென்னை SDNP வைஷ்ணவா கல்லூரி மாணவி M.சௌமியா (D/o.திரு S. முருகன், SGWCC Opr./Mine-I) தமிழக அணியில் பங்கேற்று, ஹெப்டத்லான் பிரிவில் வெண்கலம் வென்றார். இம்மாணவிகளை நமது விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரிய தடகளப் பயிற்சியாளர் திரு R.சங்கரன் பயிற்றுவித்தார்.

WIPS அமைப்பின் நெய்வேலி மையம் நடத்திய பயிற்சி நிகழ்வுகள்

பொதுத்துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கான அமைப்பின் (WIPS), நெய்வேலி மையம், அதன் உறுப்பினர்களின் மேம்பாட்டுக்காக, நெய்வேலி, கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், பல்வேறு பயனுள்ள நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தியது.

பேச்சாற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி

விப்ஸ் அமைப்பின் உறுப்பினர்களிடையே, பேச்சாற்றலை மேம்படுத்தும் வகையில், உறவுகள் மேம்பட, பெரும்பங்கு வகிப்பது ஆண்களா?



பட்டிமன்றத்தில் உரையாற்றும் திரு S. ரவிசங்கர்

அல்லது பெண்களா? என்றக் கருத்தில் ஒரு பட்டிமன்றம் 05.07.2016 அன்று, நடத்தபட்டது. விப்ஸ் அமைப்பின் உறுப்பினர்கள் இரு குழுக்களாக, இப்பட்டிமன்றக்கருத்தின், இரு வாதங்களுக்கு வலு சேர்க்கும் வகையில் சிறப்பாக உரையாற்றினர். மிகவும், சுவாரசியமாக, நடைபெற்ற இந்தப் பயனுள்ள நிகழ்ச்சியில், 120 மகளிர் ஊழியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இப்பட்டிமன்றத்தின் நடுவராக, திரு S. ரவிசங்கர், former CGM/NLCI நடுவராக செயல்பட்டார்.

இந்நிகழ்ச்சியில், நெய்வேலி மகளிர் மன்றம் மற்றும் சினேகா வாய்ப்பு சேவை அமைப்பின் தலைவி திருமதி யோகமாயா ஆச்சார்யா தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். மகளிர் மன்றப் புரவலர்கள், திருமதி தேவகி தங்கபாண்டியன் மற்றும் திருமதி சாந்தி செல்வகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். WIPS பொறுப்பாளர்கள் திருமதி R. வனஜா, திருமதி M.ராணி ஆகியோர் உரையாற்றினர்.

வாழும் கலை குறித்த பயிற்சி

25.07.2016 அன்று நடைபெற்ற "வாழும் கலை" பயிற்சி நிகழ்ச்சியில், திரு ரவிசங்கர் செபூரி, CM/System Monitoring பயிற்றுனராகப்



பயிற்சியில் உரையாற்றும் திரு ரவிசங்கர் செபூரி

பங்கேற்று சிறப்புரை வழங்கினார். நமது பொது மருத்துவமனையின், GS, Dr. C. ராஜேஸ்வரி மற்றும் DGS, Dr.M.ரஜினி, ஆகியோர் இந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றனர். WIPS பொறுப்பாளர்கள் திருமதி R. வனஜா, திருமதி N.கலையரசி ஆகியோர் உரையாற்றினர்.

பாலினப் புரிந்துணர்வில் ஏற்படும் மாற்றங்களைக் கையாள்வது குறித்தப் பயிற்சி

02.08.2016 அன்று நடைபெற்ற, பாலினப் புரிந்துணர்வில் ஏற்படும் மாற்றங்களைக் கையாள்வது குறித்தப் பயிற்சி மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில், திரு N. சதீஷ் பாபு, GM/HR, தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். அவர், தனது உரையில், இப்பிரச்சினையை சிறப்பாக கையாளத் தகுதி பெற்றவர்கள் அன்னையர்கள் என்றதுடன்,



செயல்முறை நிகழ்ச்சியில், திருமதி நளினி கேசவராஜ்

குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களின் விரும்பத்தகாத செயல்களை மாற்ற அவர்களால் மட்டுமே முடியும் என்றார். பெண்கள் தங்களைச் சுற்றி நடக்கும், அநீதிகளை மௌனமாகப் பார்த்துக் கொண்டிராமல், தேவைப்படும் இடங்களில், தங்கள் குரலினை உயர்த்தி எதிர்க்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், சென்னையைச் சார்ந்த மூத்த உளவியல் ஆலோசகர், திருமதி நளினி கேசவராஜ், இக்கருத்து குறித்து உரையாற்றியதுடன், நமது பெண் ஊழியர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். 85 பெண் ஊழியர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

உடல் ஆரோக்கியம் மற்றும் தூய்மை குறித்த பயிற்சி

"பெண் சேவை பணியாளர்களுக்கான ஆரோக்கியமும், சுகாதாரமும்" என்ற கருத்தில், ஆகஸ்ட் 17, 18 மற்றும் 25 ஆகிய மூன்று தினங்களில் சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சிகளை விப்ஸ் ஏற்பாடு செய்திருந்தது.

பெண்ணும் பொருளும் – நிதி மேலாண்மை பயிற்சி

விப்ஸ் உறுப்பினர்கள், நிதி மேலாண்மை குறித்து நன்கு அறிந்துகொள்ளும் வகையில், "பெண்ணும் பொருளும்" என்ற பயிற்சி நிகழ்ச்சி, 26.08.2016 அன்று நடைபெற்றது. தலைமை விருந்தினராக்க்



நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்கும் திருமதி யோகமாயா ஆச்சார்யா

கலந்து கொண்ட, மகளிர் மன்றத் தலைவி, திருமதி யோகமாயா ஆச்சார்யா, நிதி மேலாண்மை குறித்து அறிந்துகொள்வது, குறிப்பாக பெண்கள் அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்து கூறி, இச்சிறப்பான பயிற்சியை வழங்கிய விப்ஸ் அமைப்பைப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், நிதி ஆலோசகர், திரு V. ஸ்ரீகாந்த் மற்றும் சிதம்பரம், எஸ்.பி.ஐ. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின், முதுநிலை கோட்ட விற்பனை மேலாளர், திரு S. சுகுமாரன் ஆகியோர் உரையாற்றினர். சுமார் 140 பெண் ஊழியர்கள் பங்கேற்ற, இந்நிகழ்ச்சியில், விப்ஸ் அமைப்பின் பொறுப்பாளர்கள், திருமதி R. வனஜா, திருமதி A. எஸ்தர் ராணி, திருமதி K.B. செல்வராணி ஆகியோர் உரையாற்றினர்.



என்எல்சி இந்தியா நிறுவன கண்காணிப்புத் துறையின் செய்தி மலர்

கண்காணிப்புத்துறை தலைமை அதிகாரியின் மடல்

ஊழல் ஒழிப்புப் பணியில் பொதுமக்களும் பங்கேற்க முடியும்!



சமூகத்திற்கு எதிரான தீமைகளில், ஊழல் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஊழல் என்றால் லஞ்சம் வாங்குதல் என அனைவராலும் எளிமையாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள நிலையில், அது மட்டுமல்லாமல், தனது பதவியையும் அதிகாரத்தையும், சுயலாபத்திற்காகவோ, இதர ஆதாயங்களைப் பெறுவதற்காகவோ துஷ்பிரயோகம் செய்வதும்கூட ஊழல்தான் என அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு அரசு ஊழியர், தான் செய்யும் பணிக்காக, சட்டப்பூர்வமாகப் பெறவேண்டிய ஊதியத்தைவிட கூடுதலாக பெறுவதுதான் ஊழல் என, சட்டரீதியாக ஊழலுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.

பொதுமக்களின் நலன்கருதி மேற்கொள்ளப்படும் நலப்பணிகளின் பயன், அவர்களை சென்றடையாமல் இருப்பதற்கான முக்கியக் காரணமே ஊழல்தான். எனவே, ஊழல் மூலம், ஏழைகளும், அரசின் உதவியை எதிர்பார்த்திருப்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், ஊழலின் விளைவாக நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு, பொது விநியோகத் திட்டம் மற்றும் சுகாதார சேவைப் பணிகள் போன்றவை வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. ஊழலுக்கு யார் காரணம் என உற்று நோக்குகையில், ஒரு கோணத்தில், லஞ்சம் பெறும் அரசு ஊழியர்கள்தான் எனத் தெரிந்தாலும்கூட, லஞ்சம் கொடுக்க முன்வரும் பொதுமக்களும் முக்கியக் காரணம் என நாம் அறியமுடியும். அதாவது, பொதுமக்கள் லஞ்சம் தர முன்வரவில்லையெனில் அரசு ஊழியர்கள் லஞ்சம் பெற வாய்ப்பில்லை.

சில சிறிய ஆதாயங்களுக்காக, அதாவது தனது வேலைகள் விரைவாக நடைபெற, சில ஆவணங்கள் சமர்ப்பிப்பதைத் தவிர்க்க, சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நேரடியாக செல்லாமல் வேலையை முடிக்க, வரிசையில் காத்திருந்து பெறுவதற்குப் பொறுமை இல்லாது, குறுக்கு வழியில் வேண்டியதைப் பெற, தனது செல்வாக்கினைப் பிறருக்கு எடுத்துக்காட்ட; போன்ற காரணங்களுக்காகத்தான், பொதுவாக அரசு அலுவலர்களுக்கு பொதுமக்கள் லஞ்சம் தருகின்றனர். அரசு ஊழியர்கள் லஞ்சம் பெறுவது எந்த அளவிற்கு சட்ட விரோதமான, நன்னெறிக்கு மாறான, ஒழுக்கமற்ற செயலோ அதே போன்று, பொதுமக்கள் லஞ்சம் தருவதும், அதற்கு இணையான சட்ட விரோதமான செயல் என அனைவரும் உணர வேண்டும்.

நாட்டின் அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களிலும், ஊழலை ஒழிக்க பொறுப்பு வகித்துவரும் மத்திய கண்காணிப்பு ஆணையம், 'நேர்மையான சமுதாயத்தை உருவாக்குவதிலும், ஊழலை முற்றிலும் ஒழிப்பதிலும் பொதுமக்களின் பங்கு' என்ற மையக் கருத்தில், இவ்வாண்டிற்கான ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் கொண்டாடப்பட வேண்டும் என சரியான தருணத்தில், பொருத்தமான வகையில் அறிவித்துள்ளது. என்எல்சி இந்தியா நிறுவன கண்காணிப்புத்துறையானது. பொதுமக்களுக்கு ஊழல் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, நகரின் முக்கியப் பகுதிகளில் விளம்பரத் தட்டிகளை அமைத்தல், ஒவ்வொரு ஆண்டும் புத்தகக் கண்காட்சியில் ஊழலுக்கு எதிரான குறும்படங்களைத் திரையிடுதல் மற்றும் எதிர்கால இந்தியாவின் குடிமக்களான மாணவமணிகளுக்கு நன்னெறிக் கல்வி வழங்கி, ஒரு ஊழலற்ற சமூகத்தை உருவாக்க வழி ஏற்படுத்துதல் போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையிலும்கூட, இதுபோன்ற முயற்சிகளுக்கு பொதுமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பினை வழங்கினால் மட்டுமே அவை வெற்றியடையும்.

எனவே, கீழ்க்கண்ட உறுதிமொழியை கடவுள் பெயரால் எடுத்துக் கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

- அரசு ஊழியர் எவருக்கும் லஞ்சம் கொடுக்க மாட்டேன்
- நிறுவனத்தின் விதிகளையும், நெறிமுறைகளையும் மீற மாட்டேன்
- லஞ்சம் கொடுக்காதிருக்க, பிறரையும் ஊக்கப்படுத்துவேன்
- விதிமீறல் குறித்த செயல்கள் நடப்பது எனக்குத் தெரியவரும் பட்சத்தில், அதனைத் தடுக்க, உடனடியாக கண்காணிப்புத் துறைக்கு தெரியப்படுத்துவேன்

அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள்!

மனோஜ் குமார், IAS



உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன – கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

தமிழ் மூதாட்டி அவ்வையார் (பாடல் எண் – 28; நல்வழி)

என்எல்சி இந்தியா நிறுவனத்தில் நடைபெற்ற

நெய்வேலியில்

பாரதத்தின் முன்னாள் துணைப் பிரதமர் சர்தார் வல்லபபாய் படேலின் பிறந்த நாள், அன்று தொடங்கி ஒருவார காலம், நாடு முழுவதும், ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரமாகக் கொண்டாடப்படுகிறது.



ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரத்தினை, தொடங்கி வைக்கும் நமது நிறுவனத் தலைவர்

இவ்வாண்டு, "நேர்மையான சமூகத்தை உருவாக்குவதிலும், ஊழலை ஒழிப்பதிலும், பொதுமக்களின் பங்கு" என்றக் கருத்தை மையமாகக் கொண்டு இவ்விழாவைச் சிறப்பிக்குமாறு, மத்திய கண்காணிப்பு ஆணையம், அறிவித்தது. நமது நிறுவனத்தில், 31.10.2016 முதல் 05.11.2016 வரை இவ்விழிப்புணர்வு வாரம் கொண்டாடப்பட்டது.



விற்பனையாளர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி

நெய்வேலி கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், 31.10.2016 அன்று, நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் இந்த ஒரு வார கால நிகழ்வினைத் துவக்கி வைத்தார். தொடக்க விழாவில் ஓய்வுபெற்ற காவல்துறை கண்காணிப்பாளர், திரு A. கலியமூர்த்தி அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில், எதிர்கால இந்தியாவின் குடிமக்களான குழந்தைகளுக்கு, தரமான கல்வியை அளிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினார். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுடன் அதிக நேரத்தை செலவழிக்க வேண்டும் என்று கூறிய அவர், பொருளாதாரத்தில் மேம்பட்டவரை ஒப்பிடும்போது, பேராசையும், ஊழலும் ஒருவர் மனதில் குடிகொள்ள வழி வகுக்கும் என்பதால் இம்மாதிரியான ஒப்பீடுகளைக் கைவிடவேண்டும் என்று கூறினார். தனது துவக்க உரையில், Dr. S.K. ஆச்சார்யா அவர்கள், ஒவ்வொரு மனிதனும், பேராசையை ஒழித்து, ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்றார். இந்த ஒருவார கால நிகழ்ச்சியை, வெறும் சடங்காக மாற்றிவிடாமல், நாம் ஒவ்வொருவரும், சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதுடன், ஊழலுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று கூறினார். அவ்வமயம், நமது நாட்டைக் காப்பாற்ற, பயங்கரவாதிகளுடன் போராடி, இன்னுயிர் ஈந்த, வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.



நிறைவு நிகழ்ச்சி

முன்னதாக, கண்காணிப்புத் துறையின் வளாக இதழான "கண்காணிக்கும் கண்களின்", சிறப்புப் பதிப்பு, நமது நிறுவன கண்காணிப்புத் துறை தலைமை அதிகாரி, திரு மனோஜ் குமார், IAS, அவர்களின் செய்தி அடங்கிய துண்டு பிரசுரம் மற்றும், 2015–16ம் ஆண்டிற்கான, கண்காணிப்புத் துறையின், ஆண்டறிக்கையின் மின்னணு வடிவம் ஆகியவற்றை, Dr. S.K. ஆச்சார்யா அவர்கள் வெளியிட்டார்.

ஊழல் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை, Dr. S.K. ஆச்சார்யா அவர்கள் ஆங்கிலத்திலும், நமது நிதித்துறை இயக்குனர், திரு ராக்கேஷ் குமார் அவர்கள், ஹிந்தியிலும், மின்துறை இயக்குனர், திரு V. தங்கபாண்டியன் அவர்கள், தமிழிலும் வாசித்தனர். இந்நிகழ்ச்சியில், இயக்குனர்கள், திரு சுபீர் தாஸ் மற்றும் திரு P. செல்வகுமார் ஆகியோர் பங்கேற்றனர். முன்னதாக, ஊழல் ஒழிப்பு உறுதிமொழியானது அனைத்துத் தொழிலகங்களிலும், அலுவலகங்களிலும், ஊழியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொடக்க விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜி, மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் திரு M. ஹமீத் அன்சாரி, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மாண்புமிகு நிதியமைச்சர் திரு அருண் ஜேட்லி, மாண்புமிகு பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங், மத்திய அமைச்சரவைச் செயலர், திரு பிரதீப் K. சின்ஹா, மத்திய கண்காணிப்புத் துறை தலைமை ஆணையர், திரு K.V. சௌத்ரி, ஆணையர்கள் Dr. T.M. பாஸின், திரு ராஜீவ் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. முன்னதாக, சர்தார் வல்லபபாய் படேலின் பிறந்த நாளை முன்னிட்டு, தேசிய ஒற்றுமை தினத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில், நெய்வேலி பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. நமது கல்வித்துறை ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியை, திரு S. ஸ்ரீதர் ED/TA, PR, CSR & Edn. அவர்கள், நகர நிர்வாக அலுவலக வளாகத்தில், கொடியசைத்து துவக்கி வைத்தார்.



நாளங்காடியில் நடைபெற்ற வீதி நாடகம்



ED/SME & Conveyor பரிசு வழங்குகிறார்

இந்த ஒருவார கால நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, 02.11.2016 அன்று கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில், இந்த ஆண்டின் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, காவல்துறையின் முன்னாள் தலைவர் திரு K.சொக்கலிங்கம், IPS அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. 04.11.2016 அன்று, பொருள் மேலாண்மை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நமது ஒப்பந்தத் துறை,



கண்காணிக்கும் கண்களின் சிறப்புப் பதிப்பினை வெளியிடும்போது...

ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வார விழா நிகழ்வுகள்

கொள்முதல் பிரிவு மற்றும் கண்காணிப்புத் துறை அதிகாரிகளால், விற்பனையாளர்களுக்கென ஒரு சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நன்னெறி மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள பள்ளி



தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் நடைபெற்றத் துவக்க விழா

மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து சொற்பொழிவு நிகழ்ச்சிகள் பல்வேறு நாட்களில் நடத்தப்பட்டன. மேலும், ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த வீதி நாடகங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நெய்வேலி நகரத்தின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டன.



தூத்துக்குடியில் சிறப்பு சொற்பொழிவு

இந்த ஒரு வார கால நிகழ்ச்சியின் நிறைவு தினம் 05.11.2016 அன்று, நெய்வேலி கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, திரு S.A.F. காலித் (ED/Mines) தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ள, திரு O.S. சுவாமிநாதன் (GM/Vigilance) தலைமை ஏற்றார். கண்காணிப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மும்மொழிகளில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, மற்றும் சுவரொட்டி ஓவியம் வரையும் போட்டி ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்காக நடத்தப்பட்டன. இப்போட்டிகளில், நெய்வேலி பள்ளிகள் மற்றும் ஜவஹர் அறிவியல் கல்லூரி மாணாக்கர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, நிறைவு நாள் நிகழ்ச்சியில், பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், நமது நிறுவன ஊழியர்களுக்கான போட்டிகளும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் பகுதியில் பரிசுகள் வழங்கப்பட்டன.



போட்டிகளில் பங்கேற்ற பிக்கானீர் கல்லூரி மாணாக்கர்கள்

இதர பகுதிகளில்

ராஜஸ்தான் மாநிலம் பர்சிங்சரில்

மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே ஊழலுக்கு எதிரான, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பல்வேறு போட்டிகள் பர்சிங்சர் பகுதியில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில், பிக்கானீரில் உள்ள, துங்கார் கல்லூரி, அரசு மருத்துவ கல்லூரி, அரசு பெண்கள் கல்லூரி, பலானா அரசு மேல்நிலைப் பள்ளி, பிகானிர் சேத் தொலாராம் பஃப்னா கல்விச்சாலை மற்றும் ஸ்ரீ ஜெயின் பப்ளிக் பள்ளி ஆகியவற்றைச் சார்ந்த மாணவமணிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இரண்டு கல்லூரிகள் மற்றும் இரண்டு பள்ளிகளில் ஊழல் ஒழிப்பு குறித்து சிறப்பு விரிவுரை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தூத்துக்குடியில்

தூத்துக்குடியில், ஊழலின் தீங்கு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. தூத்துக்குடி, அரசு மருத்துவக் கல்லூரி, அன்னம்மாள் கல்வியியல் கல்லூரி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், திருச் சிலுவை ஆங்கிலோ–இந்தியன் மேல்நிலைப்பள்ளி மற்றும் கால்டுவெல் பள்ளிகளின் மாணாக்கர்கள் இப்போட்டியில், கலந்து கொண்டனர். ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த சிறப்பு விரிவுரை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

சென்னையில்

சென்னை, லயோலா கல்லூரி, ராணி மேரி கல்லூரி, முத்துகுமாரசாமி மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னை பப்ளிக் பள்ளி, ஜெய்கோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் மாணாக்கர்கள் ஊழலின் தீங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மதுரையில்

மதுரை சுப்புலட்சுமி லட்சுமிபதி அறிவியல் கல்லூரி, R.L. கடல்சார் அறிவியல் கல்லூரி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி, மகாத்மா மான்டிசேரி கல்விப் பள்ளி, கேந்திரிய வித்தியாலயா ஆகியவற்றில் சிறப்பு விரிவுரை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்தக் கல்வி நிலையங்களின் மாணாக்கர்கள் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்றனர்.



போட்டிகளில் பங்கேற்ற பர்சிங்சர் மாணவிகள்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தால் பொதிகை தொலைக்காட்சியில் இரண்டு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. சென்னை கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்ற உரையாடல் நிகழ்ச்சி 03.11.2016 அன்று ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரு O.S. சுவாமிநாதன் (GM/Vigilance) மற்றும் மூன்று முக்கியப் பிரமுகர்கள், பார்வையாளர்களுடன்



'வெளிச்சம்' – கலந்துரையாடல் நிகழ்ச்சி



பேச்சரங்க நிகழ்ச்சியில் திரு O.S. சுவாமிநாதன் மற்றும் இதரப் பிரமுகர்கள்

கலந்துரையாடினர். நமது ED/HR திரு N. முத்து மற்றும் முன்னாள் DGP திருமதி திலகவதி, IPS ஆகியோர் கலந்து கொண்ட 'வெளிச்சம்' என்ற உரையாடல் நிகழ்ச்சி 05.11.2016 அன்று ஒளிபரப்பப்பட்டது. ஊழலை ஒழிப்பதற்காக அவர்கள் கூறிய வழிமுறைகள், பார்வையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தன.

நவீன வசதிகளுடன் மழலையர் பள்ளி



குழந்தைகளுக்கான விளையாட்டுப் பள்ளியினை குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைக்கும் திருமதி யோகமாயா ஆச்சார்யா

நாட்டின் விடுதலை நாள் விழா (15.08.2016) அன்று, நெய்வேலி வட்டம்–5, மின்தடை அறிவிப்பு அலுவலகத்தின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'ஸ்மார்ட் கிட்ஸ்' என்ற மழலையருக்கான விளையாட்டுப் பள்ளியை, நெய்வேலி மகளிர் மன்றம் மற்றும் சிநேகா வாய்ப்புச் சேவைகள் அமைப்பின் தலைவி திருமதி யோகமாயா ஆச்சார்யா அவர்களது முன்னிலையில், நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நமது நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திரு A.R. அன்சாரி, இயக்குநர்கள் திரு ராக்கேஷ்குமார், திரு சுபீர் தாஸ், திரு V. தங்கபாண்டியன் மற்றும் திரு P. செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெய்வேலி குழந்தைகளின் பன்முகத் திறனை வளர்க்கும் வகையில் இந்த ஒருங்கிணைந்த மழலையர் பள்ளி நமது நிறுவனத்தின் ஆதரவுடன் நெய்வேலி மகளிர் மன்றத்தால் தொடங்கப்பட்டுள்ளது.

திருமதி யோகமாயா ஆச்சார்யா அவர்களை புரவலராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இப்பள்ளியை நிர்வகிக்கும் குழுவில், திருமதி கஞ்சன் ராக்கேஷ் குமார், திருமதி சுதேஷ்ணா தாஸ், திருமதி தேவகி தங்கபாண்டியன், திருமதி சாந்தி செல்வகுமார் ஆகியோர் ஆலோசகர்களாகவும், நிர்வாகத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள, நமது நிறுவன அதிகாரிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டிலும் ஜூலை 31 அன்று அல்லது அதற்கு முன்பு 18 மாதங்களை நிறைவு செய்த குழந்தைகள் இப்பள்ளியில் பயில தகுதி பெற்றவர்களாவர். 3 பிரிவுகளுடன் செயல்படும் இப்பள்ளி திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 மணி முதல் பகல் 12.30 மணி வரை இயங்கும்.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இப்பள்ளிக்கு கோடை விடுமுறை விடப்படும். குழந்தைகள் விளையாட்டின் மூலம் ஆர்வத்துடன் கல்வி கற்க, நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகள் இப்பள்ளியில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.



HARNESSING ENERGY
SPREADING SMILES

மின் மலர்

என்எல்சி இந்தியா நிறுவன செய்தி மலர் (முன்னாள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்)
(தனிச் சுற்றுக்கு மட்டும்) 'நவரத்னா' இந்திய அரசு நிறுவனமான
என்எல்சி இந்தியா நிறுவனத்திற்காக, அதன் மக்கள் தொடர்புத் துறையால் தொகுத்து வெளியிடப்பட்டது,
நெய்வேலி – 607 801, தமிழ்நாடு, இணையதளம் : www.nlcindia.com